கல்யாண முகூர்த்தப் புடைவைகளின்
கைராசியான ஸ்தாபனம்
சீமாட்டி
புடவை அகம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
சீமாட்டி
புடவை அகம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 05 வியாழக்கிழமை (19 - 05 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 172

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராக காமினி திசநாயக்க நியமனமாவார்?

காமினியை கொலை செய்ய தமிழ் இளைஞன் முயற்சி!

கொழும்பு, மே 19

காமினி திஸநாயக்காவைக் கொலை செய்யும் நோக்கத்துடன் துனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் சேர முயற்சித்ததாகக் கூறப்படும் ஒரு தமிழ் இளைஞரை குற்றப் புலனாய்வு பணியகம் கைது செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒய்வுபெற்ற கல்வி அதிகாரி ஒருவரினால் இந்த இளைஞர் முன்னணியின் பொதுச் செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திராவுக்கு அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டதாகவும் — அந்த இளைஞர் தான் ஒரு தமிழ் செய்திப் பத்திரிகையை ஆரம்பிப்பதில் ஆர்வமுறயாக இருப்பதாக திரு. பிரேமச் சந்திராவிடம் கூறினார் என்றும் ''சண்டே லீடர்ஸ்'' தெரிவித்துள்ளது.

காமினி திஸநாயக்காவின் பாதுகாப்பு அதிகாரிகளுடன் கிநெநிதம் கொள்ளும்படி அந்த இளைஞனுக்கு விடுதலைப் புலிகள் ஆலோசனை கூறியதாகவும் ''சண்டே லீடர்ஸ்'' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

றொனி எம்.பியாவதற்காக மற்றொருவர் ராஜினாமா!

கொழும்பு, மே 19

முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் எம். பியாக வருவதற்கு வழிவிடும் வகையில் ஐ.தே.கவின் தேசியப் பட்டியலில் உள்ள எம். பியான ரெஜினால்ட் பெரேரா இராஜினாமாச் செய்ய முன்வந்துள்ளார்.

ஐ.தே.க. வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி இத்தகவலை நேற்று வெளியிட்டது. [உ-எ-6]

லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகள்:

இராஜினாமாச் செய்யுமாறு 3 அமைச்சர்களுக்கு அழுத்தம்

கொழும்பு, மே 19

லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த வேறு மூன்று அமைச்சர்களும் கட்சிப் பிரமுகர்களி சிலரும் ராஜினாமாச் செய்யும்படி ஐ.தே.க. தலைமைப் பீடத்தினால் கேட்டுக்கொள்ள விருப்பதாகத் தெரிகிறது.

சம்பந்தப்பட்ட இந்த அமைச்சர்கள் மற்றும் கட்சிப் பிரமுகர்கள் மீது ஊழல் மற்றும் லஞ்சக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என்று ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டுள்ளது. [உ-எ]

இன்று எம்.பியாக பதவியேற்பு

கொழும்பு, மே 19

இன்று காலை நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி ஏற்கும் காமினி திஸாநாயக்கா அடுத்த சில தினங்களில் அமைச்சராகவும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராகவும் நியமிக்கப்படுவார்,

ஐ.தே.க. வட்டாரங்களை மேற்கோள்காட்டி ''வெரித்தாஸ்'' வானொலி இதனை அறிவித்தது,

ஐ.தே.கவின் தேசியப்பட்டியல் எம். பியான மொகமட் காசிம் அமிட் (வயது 80) இராஜினாமாச் செய்ததை அடுத்து ஏற்பட்ட இடத்துக்கே காமினி எம். பியாக நியமிக்கப்படவிருக்கிறார்.

இன்று காலை 10 மணியளவில் நாடாளுமன்றம் கூடும் போது அவர் எம். பியாக சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து — இது வரை காலமும் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பதவிகளை தன்னிடம் வைத்திருந்த ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க அவற்றில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பதவியை காமினி திஸநாயக்காவுக்கு வழங்குவார் என கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பதவியை ஏற்றதும் கட்சிக்குள்ளும் அரசாங்கத்திலும் ஜனாதிபதிக்கு அடுத்த ஸ்தானத்தை காமினி பிடித்துக் கொள்வார் என்றும் கருதப்பட்டது. [உ-எ-3-6]

பல லட்சம் ரூபா கை மாறியது?

கொழும்பு, மே 19

காமினி திஸநாயக்கா எம். பியாவதற்கு வசதியாக தமது பதவியை விட்டுக் கொடுத்த ஐ.தே.க. தேசியப்பட்டியல் எம். பியான எம். டீ. காசிம் அமிட்டுக்கு —

பிரதியுபகாரமாக பல லட்சம் ரூபா கைமாறியிருக்கலாம் என்று கொழும்பில் பேசப்படுவதாக வெரித்தாஸ்வானொலி குறிப்பிட்டது. [உ-3]

சொத்தி உபாலி விவகாரம்: ஐ. தே. கவில் நெருக்கடி!

கொழும்பு, மே 19

சொத்தி உபாலி விவகாரம் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஆனமான அரசியல் நெருக்கடி ஒன்றுக்கு வழிவகுத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சிச் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவரான சொத்தி உபாலியைக் கைது செய்த விதத்தை அமைச்சர் சிறிசேனகூரே கடுமையாக விமர்சித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சொத்தி உபாலியைக் கைது செய்த சம்பவத்தை பெரிய தொரு நிகழ்ச்சியாக அரசு விளம்பரம் செய்து வருவதையும் அமைச்சர் கூரே கண்டித்திருக்கிறார்.

''உபாலி குற்றம் செய்தி (6 ஆம் பக்கம் பார்க்க)

தேசியப் பட்டியல் எம். பியை ராஜினாமா செய்யவிடாது 'சொத்தி' உபாலி மிரட்டினார்

தேசியப்பட்டியல் எம். பி ஒருவரைச் சந்தித்து, அவரைப் பதவி விலக வேண்டாம் என்று சொத்தி உபாலி கேட்டுக்கொண்டதை அடுத்தே உபாலியைக் கைது செய்யும் உத்தரவை அரசாங்கம் பொலிஸிக்கு விடுத்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

இது போன்ற கோரிக்கை தமக்குத் தொலைபேசி மூலம் விடுக்கப்பட்டதாக தேசியப் பட்டியல் எம். பியான ஆலேக் றொபர்ட்ஸன் ஒப்புக்கொண்டார். யார் தொலைபேசியில் பேசினார் என்பது தமக்குத் தெரியாது என்றும் அவர் கூறினார். (உ-எ)

சொத்தி உபாலிக்கு உதவிய அமைச்சர் பற்றி விசாரணை

கொழும்பு, மே 19

சொத்தி உபாலியின் நடவடிக்கைகளுக்கு அரசியல் கவசம் வழங்கி வந்ததாகக் கூறப்படும் பிரேமதாஸா அரசாங்கத்தில் செல்வாக்குமிக்க அமைச்சர் ஒருவரின் செயல்பாடுகள் பற்றி விசாரணை நடத்தும்படி பொலீஸார் பணிக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விசாரணை சொத்தி உபாலியின் நடவடிக்கைகளுடன் அந்த அமைச்சருக்கு இருந்த தொடர்பை வெளிக்கொணருவதாக இருக்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எப்படியாயினும்— தமது நடவடிக்கைகளுடன் அரசியல்வாதிகளை சம்பந்தப்படுத்தி எந்த வாக்கு மூலத்தையும் பொலீஸாரிடம் சொத்தி உபாலி கடந்த சனி வரை அளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகள்:

அமைச்சர் பதவியிலிருந்து சிறிசேன கூரேக்கு கல்தா?

அவரின் மூன்று சகாக்களும் பதவியிழப்பர்!!

கொழும்பு, மே 19

அமைச்சர் சிறிசேன கூரேயும் அவருடைய நெருங்கிய சகாக்களான வேறு மூன்று அமைச்சர்களும் அமைச்சர் பதவிகளை இழக்க விருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வாரம் இடம்பெற்ற

—அமைச்சர்கள் கலந்து கொண்ட — கூட்டம் ஒன்றில் அமைச்சர் சிறிசேன கூரேக் கும் ஜனாதிபதி விஜேதுங்காவுக்கும் இடையே இடம்பெற்ற சூடான வாக்குவாதம் கூரே அமைச்சர் பதவியை இழப்பதற்கு வழிவகுக்கக்கூடியதாக [6 ஆம் பக்கம் பார்க்க]

போதைவஸ்து வர்த்தகம் நகரசபை உறுப்பினர் கைது!

கொழும்பு, மே 10

ஹெரோயின் போதைவஸ்து வர்த்தகத்தில் ஈடுபட்டதாக பொலீஸ் போதைத் தடுப்புப் பணியகம் கடந்த வாரம் ஐந்து பேரை வெல்லம்பிட்டியாவில் வைது செய்தது. அவர்களில் ஒருவர் கொள்ளளவை நகரசபை உறுப்பினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்கள் அனைவரும் ஹெரோயினை பக்கட்டுகளில் அடைத்து கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

புன்னாலைக்கட்டுவனில் புலிகள் அதிரடித் தாக்கு!

இரு படையினர் பலி; ஆயுதங்களும் மீட்பு

யாழ்ப்பாணம், மே 19

புன்னாலைக்கட்டுவில் அமைந்துள்ள இராணுவத் தினரின் 2 காவலரண்கள் மீது நேற்று அதிகாலை 2.40 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் குறைந்தது இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இத் தாக்குதலின் போது ஏ. கே. இலகுயந்திரத் துப்பாக்கி - 1, அதற்கான ரம்ரவைக்கூடு - 1, ரவைத் தொடர்கள் - 90, ரி 56 ரகத்துப்பாக்கி - 1, அதற்குரிய ரவைக்கூடு - 1, டோர்ச் லைட் - 1 ஆகியவை விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலின் போது லெப்டினன்ட் துரையப்பன் அல்லது வேதா (கோணமலை ரவிக்குமார் — மட்டக்களப்பு) என்ற போராளி வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் துரையப்பனின் புகழ் (6ஆம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண

மத்தியஸ்தம் வகிப்பதற்கு ஆசிய நாடு ஒன்று விருப்பம்

கொழும்பு, மே 19

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு உதவுவதற்கு தென்னாசிய நாடு ஒன்று விருப்பம் கொண்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இனப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலமே தீர்க்க வேண்டும் என்ற கொள்கை உடைய பிரஸ்தாப நாட்டின் கொழும்பில் உள்ள தூதரக அதிகாரிகள் இது விடயமாக அரசின் சில முக்கிய பிரமுகர்களுடன் பேசியதாக அறிய வருகிறது.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேசுவதற்கு தாம் நாடுவரக நின்று உதவ முடியும் என்ற விருப்பத்தையும் சம்பந்தப்பட்ட நாட்டின் ராஜதந்திரிகள் அரச பிரமுகர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளனராம்.

விடுதலைப் புலிகள் தரப்பும் தமது நடுவர் பணிக்கு விருப்பம் தெரிவித்தால் மட்டுமே தாம் அந்தப் பணியில் இறங்க (6 ஆம் பக்கம் பார்க்க)

1,200 தொன் சீனி அடுத்த வாரம் வரும்

யாழ்ப்பாணம், மே 19

அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கும் 'கோமாரி' கப்பலில் ஆயிரத்து 200 மெற்றிக் தொன் சீனி எடுத்து வரப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் சீனிக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற காரணத்தால் கூடுதல் சீனி எடுத்துவர ஏற்பாடாகியுள்ளது.

இக்கப்பலில் அரிசி, பருப்பு மற்றும் அத்தியாவசியப் பொருள்களும் எடுத்து வரப்படவிருக்கின்றன. [உ-3]

7, 500 பரல் மண்ணெண்ணெய் மாஹோவில் வந்து சேரும்

அதிசமயம் பருத்தித்துறையில் மா இறக்கிக் கொண்டிருக்கும் ''மாஹோ'' கப்பலில் பொருள் இறக்கி முடிந்ததும் கொழும்பு திரும்பி மண்ணெண்ணெய் ஏற்றி வரவிருக்கிறது.

ஜூன் மாதத்துக்கான கோட்டாவான— ஏழாயிரத்து 500 பரல் மண்ணெண்ணெய் ஏற்றிக் கொண்டு மீண்டும் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலம் 7ஆயிரத்து 500 பரல் மண்ணெண்ணெய் மாதாந்தம் எடுத்துவர பாதுகாப்பு இணைப்புக் குழு அனுமதி வழங்கியுள்ளமை தெரிந்ததே. (உ-6)

கொழும்பு கொள்விலையிலிருந்து மருந்துகள் 50 வீதம் மட்டுமே கூடுதல் விலைக்கு விற்கப்படும்

யாழ்ப்பாணம், மே 19

கொழும்பிலிருந்து எடுத்து வரப்படும் மருந்து வகைகள் அதிகு கொள்வனவு செய்யப்படும் விலையைவிட ஐம்பது சத வீதம் மட்டுமே இங்கு கூடுதலாக விற்கப்படும்.

உதாரணமாக கொழும்பில் ஒரு ரூபாவுக்கு நாம் செய்யப்படும் மருந்து யாழ்ப்பாணத்தில் ஒரு ரூபா ஐம்பது சதத்துக்கு விற்கப்படும்.

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்ற நிர்வாகசபை உறுப்பினர்களும் மொத்த வியாபாரிகளும் நடத்திய கலந்துரையாடலில் இது சம்பந்தமான தீர்மானம் எடுக்கப்பட்டது.

அந்தக் கலந்துரையாடலில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக வ.பி.யா.ஆ.ம. வணிகர் மன்றம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

✶ கொழும்பில் இருந்து எடுத்து வரப்படும் மருந்து வகைகளை கொழும்பு கொள்விலையிலிருந்து — செலவுகள் (6 ஆம் பக்கம் பார்க்க)

பிரேமா கொலை குறித்து விசாரிக்க ஆணைக்குழு!

ஜனாதிபதி விஜேதுங்கா இணக்கம்

மணிலா, மே 19

ஜனாதிபதி பிரேமதாஸாவின் படுகொலை குறித்து விசாரணை நடத்த ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

பிரேமதாஸா விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டார் என்ற அரசின் கூற்றில் தமக்கு நம்பிக்கையில்லை என்று பிரேமதாஸாவின் குடும்பத்தினர் கூறுவதால், இக் கொலை குறித்து திகிரமாக விசாரிக்க ஜனாதிபதி விஜேதுங்கா முன்வந்திருப்பதாக ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் விஜேசேகராவை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

ஆனால் ஆணைக்குழுவில் இடம்பெறும் ஆணையாளர்கள் குறித்தோ, ஏனைய விவரங்கள் குறித்தோ வேறு தகவல்கள் ஏதும் வெளியிடப்படவில்லை. [உ-3]

லலித் கொலை:

ஆணைக்குழு நியமிக்க அரசாங்கம் மறுப்பு

கொழும்பு, மே 19

முன்னாள் அமைச்சர் லலித் அதுலத்முதலி கொலை தொடர்பாக மீண்டும் விசாரணை ஒன்றை நடத்த ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மறைந்த அதுலத்முதலியின் குடும்பத்தினர் இவ்வேண்டுகோளை விடுத்திருந்தனர். இவ்வேண்டுகோள் நிராகரிக்கப்பட்ட தகவலை ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு நெருங்கிய வட்டாரங்களை மேற்கோள்காட்டி ''சண்டே ஐலண்ட்'' வெளியிட்டிருக்கிறது. (உ-எ)

மூன்றாம் ஆண்டு கலைப்பீட மாணவரின் பரீட்சை முடிவுகள் நாளை

யாழ்ப்பாணம், மே 19

யாழ். கலைப்பீட 3 ஆம் ஆண்டு மாணவர்களின் பரீட்சை முடிவுகள் நாளை வெளியாகும் என பல்கலைக் கழக வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

இப்பரீட்சை முடிவுகள் எட்டுமாக்கு காலமாகியும் பெற [6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA COLLEGE PRIMARY SCHOOL INTER HOUSE

ATHLETIC MEET

Will be held on

Friday 20 th May at 2-00 p.m.
at the BICKNELL FIELD

Chief Guests:

MR & MRS C JEYARATNAM

Alumni, Parents and Friends are Cordially Invited.

PRINCIPAL

(C-8132)

நன்றி நவிலல்

பிரபல நாதஸ்வர வித்துவான் பிச்சையப்பா அவர்களின் அன்பு மனைவி திருமதி சறோஜா பிச்சையப்பாவின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்த அன்பர்கள், ஆதரவாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி:
ரவி, ரஜி
(மகன்மார்)

259, சங்கிலியன் தோப்பு,
நல்லூர்.
(30958)

கண்ணீர் அஞ்சலி

சென். அன்ரனீஸ் உரிமையாளரும் எமது நண்பருமான
ஜோசப் ஷேர்லியின் தந்தையார்
காலஞ்சென்ற
திரு. ஜோசப் செல்வரட்ணம்
அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலையாழி
நண்பர்கள்
(30960)

ஓராண்டு நினைவலைகள்

திருமதி இராசேந்திரம் செல்லம்மா
(தபாற் கந்தோர் "ஸ்ரீபகவான்", அளவெட்டி.)

மண்மடியில்: 27 – 01 – 1901
விண்மடியில்: 30 – 04 – 1993

ஆண்டவன் உமை அழைத்து
ஆண்டொன்று போனாலும்
தோன்றாதம்மா உம் உருவம்
தினம் தோறும் எம் கண்ணில்!
உடலிருந்த வேளையிலே
உத்தமியே எமக்களித்த
உரிசாரம் நற் படமும்
அதனையும் நாம் மறவோம்
நித்திலனே நீர் தந்து
எனையழைத்துக் கொள்ளும் மட்டும்
விழுதலியே உமை மறவோம்
நின் வழியே எங்கள் வழி

உங்கள் மறவாக் வாடும்
மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள். பூட்டப்பிள்ளைகள்,
உற்றார். உறவினர்.

நன்றி:
இ. செல்லராசா,
தபாற் கந்தோர்,
"ஸ்ரீ பகவான்"
அளவெட்டி.
(30956)

பாடசாலைகளில்

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான வருடாந்த தடகளப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமையும் மறுதினம் சனிக்கிழமையும் மாலிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ந. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

15, 17, 19 வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆண் — பெண் இருபாலாருக்கிடையேயான இப்போட்டிகள் முதல் நாள் பிற்பகல் வேளையும் மறுநாள் முழுநாளும் இடம்பெறவுள்ளன. (க-90)

★ ★ ★

வைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய தமிழ்த்தினவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1மணிக்கு அதிபர் திரு. வே. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பு. அணைசவிக்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ம)

★ ★ ★

நாங்கேகண்துறை நடேஸ் வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1. 30 மணிக்கு அதிபர் திரு. க. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும். சண்டிலிப்பாய பிரதேச பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

★ ★ ★

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி நீண்டதூர வீதி ஓட்டப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்;

★ ★ ★

கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலய மாணவர்களின் தமிழ்த்தின விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ஆ. ஆகிலதாஸ் தலைமையில் நடைபெறும்.

போராட்டத்திற்கு மகளை ஒப்படைத்த தந்தை

யாழ்ப்பாணம், மே 19

உடையார்கட்டிக் உள்ள வல்லிபுரம் பகுதியைச் சேர்ந்த பெஞ்சமின் சுந்தரராஜன் என்பவர் மற்றிடா என்ற தனது மகளை விடுதலைப் போராட்டத்துக்காக ஒப்படைத்தார்.

கடந்த ஞாயிறன்று விடுதலைப் புலிகள் மகளிர் அணியின் நடுவப் பணியகத்தில் வைத்து அந்தத் தந்தை மகளை ஒப்படைத்தார்.

விஞ்ஞானக் கல்வி நிலையம்

நல்லூர்

A/L 96

தூயகணிதம்

ஆசிரியர்:
P. ஜெயக்குமார்

சனி ஞாயிறு 5 p.m.

ஆரம்பம்:
21 – 05 – 94

(சி-8218)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 19

சாவகச்சேரி கல்விக்கோட்டமட்டத்திலான பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 2-30 மணி முதல் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

போட்டிகளில் பங்கு பற்றும் பாடசாலை அணிகள் வருமாறு:-

17 வயது

★ 3 ஆம் இடத்தை தெரிவு செய்வதற்கான ஆட்டம்—சாவகச்சேரி இந்துஎதிர் சொறிலாமம் திருநாவுக்கரசு ம. வி.

★ இறுதியாட்டம் – சாவகச்சேரி மகளிர் எதிர் றிபேர்க் கல்லூரி.

19 வயது

★ 3ஆம் இடத்தை தெரிவு செய்வதற்கான ஆட்டம் — சாவகச்சேரி இந்து எதிர் வரணி ம. வி.

★ இறுதியாட்டம் — சாவகச்சேரி மகளிர் எதிர் றிபேர்க் கல்லூரி. [இ-5]

★ ★ ★

அளவெட்டி விநாயகர் விளையாட்டு கழகம் இணுவிலிலுள்ள மகாஜனாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3 மணி – யங் ஹென்றீஸ் அணி எதிர் கொய்யாத் தோட்டம் ஐ. வி. க. அணி.

★ 4 மணி — மயிலங்காடு ஞானமுருகன் வி. க. அணி எதிர் புங்குடுதீவு வி. க. அணி. (த-20)

★ ★ ★

நல்லூர் பிரதேச வலைப்பந்தாட்ட அணிக்கும் தெல்விப் பளை பிரதேச செயலக வலைப்பந்தாட்ட அணிக்கும் இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி இன்று மேலிக்கு மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

பி. விபுலானந்தன் நினைத்துக்காக யாழ். சென்றலஸ்ட்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ் பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடத்தி வரும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ 3 30 மணி; ஒக்ட் கோல்ட்ஸ் அணி எதிர் பல்கலைக்கழக 'பி' அணி.

★ 4 30 மணி; பற்றீஷியன் அணி எதிர் பல்கலைக்கழக 'ஏ' அணி. (த)

★ ★ ★

யாழ். ஐங்கரன் விளையாட்டுக் கழகம் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கழக மைதானத்தில் நடத்திவரும் மென்பந்து கிறிக்கெட் போட்டித் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் பொற்பதி வி. க. அணியை எதிர்த்து சிற்றம்பலம் வி. க. அணி மோதும்

நாளை

சற்றிநியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சைவப் புலவர் திரு. சு. கணபதிப் பிள்ளை "இந்துமதமும் சைவமும்" எனும் பொருள் பற்றி உரை நிகழ்த்துவார். வடமராட்சி தெற்கு மேற்கு திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. க. இராசரத்தினம் அறிமுகவுரை நிகழ்த்துவார். (க-)

★ ★ ★

உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியில் நாளை 20 ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.ஜெ. சத்தியேந்திரன் "தென்னைப் பயிர்ச் செய்கையும் தேங்காய் உற்பத்தியைக் கூட்டும் வழிமுறைகளும்" எனும் பொருள் பற்றி உரை நிகழ்த்துவார். அதிபர் திரு. ஆனந்தராஜ் கருத்தரங்குத் தலைமை வகிப்பார். (ம)

★ ★ ★

தென்மராட்சி கல்வி கோட்டப் பாடசாலைகளின் சுகாதார வார விழா நிகழ்ச்சிகள் நாளை பிற்பகல் 1 மணிக்கு மீசாலை அக்னாரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் அதிபர் செல்வி தி. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறும். (த-117)

★ ★ ★

சாவகச்சேரி நகர இராம அலுவலர் பிரிவுக்கான சுகாதாரக் குழுக் கூட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறும், (த-117)

★ ★ ★

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் ஆதரவில் நடத்தப்பட்ட மரம்நடுவதற்கான போட்டித் திட்டத்தின் ஒராண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (த-151)

ஆலயங்களில்

புங்குடுதீவுப் பங்குமக்களின் பாதுகாவலராக புனித பிரான்சிஸ் சவேரியாரின் திருநாள் திருப்பலி நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ் பேராயத்தில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

★ ★ ★

அராலி ஆவரம்பிடி ஸ்ரீமுத்துமாரி அம்பாள்தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஒன்பது நாட்கள் நடைபெறும் (க-12)

★ ★ ★

சண்டிலிப்பாய் ஆலங்குழாய் முருகமூர்த்திகோவில் வருடாந்த உற்சவம் கடந்த மே 15 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி உள்ளது 23ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 30மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் பகல் 12மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

உற்சவகாலத்தில் தினமும் காலை 6 30 முதல் 7 30வரை சமயத் தொடர் சொற்பொழிவுகள் சைவப்பெரியார்களால் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. (க-90)

★ ★ ★

இயக்கச்சி, முகாவில் ஆற்றங்கரை திரியாய் அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நாளை இரவு நடைபெறும். (த-117)

யாழ். மாவட்ட நீதிமன்றில் 684 வழக்குகள் தாக்கல்

யாழ்ப்பாணம் மாவட்ட தமிழ் நீதிமன்று ஆரம்பிக்கப்பட்ட கடந்த 93 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதியிலிருந்து இவ்வருடம் ஏப்ரல் மாதம் வரை 684 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 336 வழக்குகளுக்கு விசாரணையின் பின் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளன.

351 குடியியல் வழக்குகளும் 333குற்றவியல் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இவற்றில் சமூகச் சீர்கேடு வழக்குகளே அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டது. (தக-162)

விற்பனைக்கு

கொழும்புச் சீமெந்து
வாள்பிளேற்
கற்பூரம்
மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்

நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

C.M. சுகந்தினி
இல, 309, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(30957)

பயிலுநர் ஆசிரியர் சேவை போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள்

திங்கள், புதன், வெள்ளி தினங்களில்
4-00 — 5-30

பாடங்கள்:
பொது அறிவு, பொதுவிவேகம்

ஆரம்பம்: 25 - 05 - 94
மணி, 4-00

முழுக்கட்டணம்: 200/-

மேலும் விபரங்கட்கு:
SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3RD CROSS STREET.
JAFFNA.
(சி/8178)

ஈவ்லின் இரத்தினம் பரிசினைப் பண்பாட்டு நிறுவனம்

கருத்தரங்கு

19-05-1994 (இன்று)

தலைப்பு:- ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றில் மகாகவி

ஆய்வாளர்:- கலாநிதி நா. சுப்பிரமணியன்
முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை

தலைமை:- பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தலைவர், தமிழ்த்துறை, யாழ்பல்கலைக்கழகம்.

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எஸ், சிவலிங்கராஜா
இயக்குனர்
(சி/8180)

நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

AL/96

பௌதிகவியல்: திரு. கணேசன்
ஆரம்பம்: 23 - 05 - 94
(4 மணி)

AL/95

வெப்பவியல்:
ஆரம்பம்: 23 - 05 - 94
(5 மணி)

(சி/8220)

நான்காம் ஆண்டு நீங்கா நினைவு

B.S. நிக்கலஸ்
(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)
தோற்றம்: 28 - 08 - 1908
மறைவு: 19 - 05 - 1990

மேரி றோசம்மா நிக்கலஸ்
(இளைப்பாறிய ஆசிரியை)
தோற்றம்: 17 - 07 - 1920
மறைவு: 17 - 01 - 1990

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறைந்த எங்கள் அன்புப் பெற்றோர்க்கு, எங்கள் கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம்.

பாசத்துடன் நினைவு கூரும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மருமகன், மருமகள், உறவினர்.

141/1, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(30959)

கண்ணீர் அஞ்சலி

யா/கோண்டாவில் இ. சி. த க. பாடசாலை அபிவிருத்திச்சங்க நிர்வாக சபை உறுப்பினர்.

திருமதி
இரத்தினேஸ்வரி கோபாலசிங்கம்
(குமரக்கோட்டம் கோண்டாவில்)

அன்னாரின் மறைவு (18-5-94) எமது பாடசாலைக்கு ஒரு பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவுத்துயரில் வெந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மாணவர்கள், ஆசிரியர்கள்,
அதிபர்
பாடசாலை அபிவிருத்திச்சங்க
உறுப்பினர்கள்.
(30962)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு வேளையில் வேறு இடங்களுக்கு செல்லும் மக்கள்

தென்மராட்சி, மே 19

கடந்த மூன்று தினங்களாக தினமும் இரவில் ஹெலிகொப்டரும் புக்காரா விமானமும் பனை, கிளாலி எழுதுமட்டுவாழ் பகுதிகளை வட்டமிட்டுச் செல்வதால், அப்பகுதிகளைச் சேர்ந்த மக்களில் பலர் இரவு வேளைகளில் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடைந்து வருகின்றனர். (ஒ-117)

விவசாயிகளுக்கு விதை நெல்

அராலி, மே 19

வலிமேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட நெற் செய்கையாளருக்கு விதை நெல் வழங்கப்பட உள்ளது.

விதை நெல் தேவைப்படும் விவசாயிகளின் விவரங்கள் அவர்களுக்கு தேவைப்படும். இலங்கை போன்றவற்றை உடனடியாக சேகரித்து தமக்கு அனுப்பி வைக்குமாறு வலி மேற்கை சேர்ந்த கிராமஉத்தியோகத்தர்களை பிரதேச செயலர் திரு. கா. சத்திரராசா பணித்துள்ளார். (இ-12)

புகுமுகத் தேர்வு

கொழும்பு, மே 19

தேசிய கல்வி நிறுவனத்தின் ஆதரவில் தமிழ் மொழித் துறைப் பிரிவினரால் நடத்தப்படவுள்ள கல்வி மாணவர்களுக்கான நெறி (1994—1996) புகுமுகத் தேர்வு பரீட்சை இம் மாதம் 21ஆம் திகதி மரைகம ஜனாதிபதி மகா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது. (க-152)

அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மே 18

நவாலி ஸ்டேஷன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு நவாலி இந்து அபிவிருத்திச் சங்கத்தினர் பெரிய கிளவு சரஸ்வதி திரு வுருவப் படத்தை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இதற்காக இப் பாடசாலையின் அதிபர் மேற்படி சங்கத்தினருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இப் பாடசாலை மண்டபத்தில் முன்னர் இருந்த சரஸ்வதி படம் விஷமிகளால் திருடப்பட்டதை அடுத்து இச்சங்கத்தினர் இதனை அன்பளிப்புச் செய்துள்ளமை குறிபிடத்தக்கது (ஒ-162)

ஒய்வூதியம்

தென்மராட்சி, மே 19

பளை கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கு மே மாதத்திற்குரிய ஓய்வூதியம் வழக்கப் போல் வழங்கப்பட்டுவருவதாக வங்கி முகாமையாளர் திரு. கி. சச்சிதானந்தம் அறிவித்துள்ளார். [ஒ-117)

மாத்தளை மாநகர மேயர் மீது 28 குற்றச்சாட்டுகள்

கொழும்பு, மே 19

மாத்தளை மாநகர சபை மேயர் ரஞ்சித் அளுவிகார மீது 28 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர நிர்வாகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகளை அடிப்படையாக வைத்து இக்குற்றச்சாட்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது (உ-எ-6)

16 வயதுக்கு மேற்பட்டோருக்கும் லைசென்ஸ்

கொழும்பு, மே 19

16 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட எவரும் 150சிசி வேகத்துக்கு கீழ்ப்பட்ட மோட்டார் சைக்கிள் ஓடுவதற்குரிய லைசென்ஸைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்க முடியும் என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் டேவிட் பெரேரா அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட வயதுப் பிரிவில் உள்ள மாணவர்களும் லைசென்ஸ் கோரி விண்ணப்பிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், மே 19

யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றம் நடத்தும் கலாநிதி நா. சுப்பிரமணியன், கௌசல்யா சுப்பிரமணியன் இணைந்தெழுதிய "இந்தியச் சிந்தனை மரபு" நூல் அறிமுக விழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கலைஞர் பதி கலையரங்கத்தில் மன்றத் தலைவர் செல்வன் கி. சிவகரன் தலைமையில் நடைபெறும். (க)

வலிகாமம் மேற்கு விவசாயிகளுக்கு சிறுபோக செய்கை உதவி நிறுத்தம்

ஐக்கிய ராஜ்ய சிறுவர் பாதுகாப்பு நிதியம் கைவிரிப்பு

அராலி மே 19

வலிகாமம் மேற்கு விவசாயிகளுக்கு, தற்போதைய சிறுபோகச் செய்கையின் போது ஐக்கிய ராஜ்ய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவி கிடைக்க மாட்டாது.

ஐக்கிய ராஜ்ய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் இப் பகுதிவிவசாயிகளுக்கு வடனாக வழங்கப்பட்ட பணம் திருப்பிச் செலுத்தப்படாததும்— பயிர்ச் செய்கைக்காக இந்த நிதியத்தினால் புனரமைக்கப்பட்ட பொன்னாலை பெரியகுளம் விவசாயிகளினால் உரிய முறையில் பயன்படுத்தப்படாததுமே உதவி நிறுத்தத்துக்கான காரணம்.

கடந்த செப்ரம்பர்மிழமை நடைபெற்ற வலிமேற்கு பிரதேச மாதாந்த விவசாய குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட சிறுவர் பாதுகாப்பு நிதியப் பிரதிநிதி மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

விவசாயிகள் ஒத்துழைக்கத் தவறியதால் கொழும்புத் தலைமையகமே தற்போதைய சிறுபோகத்தில் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்த அனுமதி மறுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் 1991 ஆம் ஆண்டு தொடக்கம் வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் விவசாய ஊக்குவிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி விவசாயிகளுக்கு பல்வேறு உதவிகளையும் வழங்கி வந்தது.

கடந்த கால போகத்தில் இந்த நிதியத்தினால் 600 விவசாயிகளுக்கு எட்டு லட்சம் ரூபா பெறுமதியான விவசாய உள்ளீடுகள் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டன. இதில் இரண்டு லட்சம் ரூபா பணம் இதுவரை மீளளிப்புச் செய்யப்படவில்லை.

அதே போன்று 1992ஆம் ஆண்டு பிரஸ்தாப நிதியத்தால் ஆறு லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட பொன்னாலை பெரியகுளமும் விவசாயிகளினால் உரிய முறையில் பராமரிக்கப்படவில்லை. பயன்படுத்தப்படவும் இல்லை.

இப் விடயம் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது:

கூட்டத்துக்கு தலைமை வகித்த பிரதேச செயலர் திரு கா. சத்திரராசா, விவசாயிகள் செலுத்தவேண்டிய கடனை மீளளிப்புச் செய்ய உற்பத்திக் குழுக்களின் பிரதிநிதிகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்—

பொன்னாலை பெரியகுளம் பராமரிப்பு வேலைகளை விவசாயிகள் மூலம் மேற்கொள்ள கமநல சேவைத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும் என்றும் கூட்டத்தில் உறுதி அளித்தார்.

அடுத்த கால போகத்திலாவது விவசாயிகளுக்கு உதவு மாறு மேற்படி நிறுவனப் பிரதிநிதியை அவர் கேட்டுக் கொண்டனர். (இ-12)

தேர்தல் வேளையில்தான் கருணை பிறக்கிறது அரசுக்கு

எதிரணி எம். பி. சாடுகிறார்

கொழும்பு, மே 19

தேர்தல் நெருங்கும் போதுதான் அரசுக்கு மக்களின் நினைவு வருகிறது. ஆட்சியைத் தொடர்ந்து நீடிப்பதற்காக அரசாங்கம் "பெருங்கருணையுடன்" பொருள்களின் விலைகளைக் குறைக்க ஆரம்பித்துள்ளது.

கம்பஹா மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பியான ஜெயரட்ன பெர்னாண்டோ புள்ளே நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அரசு இப்போது திடீரென பொருள்களின் விலைகளைக் குறைப்பினும் — கடந்த 17 ஆண்டு கால ஐ. தே. க. ஆட்சியில் பொதுமக்களின் உடைமைகள் குறையாடப்பட்டதையும் ஊழல், லஞ்சம் முதலானவைகளையும் மக்கள் மறந்து விடமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

பொய், லஞ்சனையால் பொதுமக்களைத் தொடர்ந்து ஏமாற்ற முடியாது எனத் தெரிவித்த அவர், எதிர்வரும் தேர்தல்களில் எதிரணியினர் ஆட்சியைக் கைப்பற்றுவதைத் தவிர்க்க முடியாது என்றும் சொன்னார். (ஒ-எ-6)

பல்கலைக்கழக கல்லூரிகளில் டிப்ளோமா முடிப்போருக்கு ஆசிரியர் பதவி கிடைக்கும்

கொழும்பு, மே 19

இணைக்கப்பட்ட பல்கலைக் கழகக்கல்லூரிகளில் டிப்ளோமா கல்வியை முடித்துக் கொண்டு இவ்வாண்டு செப்டெம்பரில் வெளியேறு பவர்களை ஆங்கிலம் விஞ்ஞானம் மற்றும் கணித ஆசிரியர்களாக நியமிப்பதற்கு கல்விச் சேவைகள் குழு சம்மதம் தெரிவித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக் கழகக் கல்வித் துறை ஆலோசகர் திரு ஸ ஆந்தநாயகா இத்தகவலை தம்மைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரிகளின் மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார். (ஒ-எ)

வெளிநாடுகளில் இருந்து வருவோருக்கு யாழ். ஆஸ்பத்திரியில் எய்ட்ஸ் பரிசோதனை

வெளிநாட்டில் இருந்து யாழ்ப்பாணம் திரும்புவோரை எய்ட்ஸ் பரிசோதனைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,

யாழ். வைத்தியசாலை எய்ட்ஸ் மற்றும் பாலியல் பிரிவு தலைமைப் பொறுப்பதிகாரி திரு ஆர். கிருஷ்ணமூர்த்தி மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

யாழ். மாவட்டத்தில் எய்ட்ஸ் நோயின் தாக்கம் ஏற்படுவதை தடுக்கும் வகையில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதன் ஓர் அங்கமாக வெளிநாட்டில் இருந்து திரும்பியோரையும் எய்ட்ஸ் பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பரிசோதனை இலவசமாக மேற்கொள்ளப்படும்.

யாழ் ஆஸ்பத்திரி 33 ஆவது அறைக்கு பாலியல் நோய்ப் பரிசோதனைக்கு வருவோரும், மருத்துவ பரிசோதனைக்கு விரும்பி வருவோரும் எய்ட்ஸ் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்,

இவ்வருடத்தில் இதுவரை 32 பேர் எய்ட்ஸ் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். எவரும் அந்நோய்க்கு ஆளாகியுள்ளதாக அடையாளம் காணப்படவில்லை— என்றார். (ஒ-3)

தொனனம் நாற்றுக்கள் 20 ஆயிரம் வந்தன

யாழ்ப்பாணம், மே. 19

தற்போது பருத்தித் துறையை வந்தடைந்த 'ஹுனு' கப்பலில் 20 ஆயிரம் தென்னம் நாற்றுக்கள் கமநல சேவை நிலையங்களுக்கென எடுத்து வரப்பட்டுள்ளன.

இவற்றில் 4, 5 வருடத்தில் பயன் தரக்கூடிய கட்டைக் கலப்பினம் 10 ஆயிரமும், 3 வருடங்களில் பயன் தரவல்ல உயர்ரக கலப்பினம் 10 ஆயிரமும் அடங்குகின்றன.

இவை கமநல சேவை நிலையங்களில் நாற்றுமேடையில் இடப்பட்டு கன்றுகளாக வளர்ந்ததும் பொது மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-க-162)

திருமறைக் கலாமன்ற 3 நாள் தமிழ் விழா

யாழ். திருமறைக் கலாமன்றத்தினர் இம் மாதம் 23, 24, 25 ஆம் திகதிகளில் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு 'தமிழ் விழா' ஒன்றை நடத்தவுள்ளனர்.

யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் 24ஆம் திகதி காலை 10மணிக்கு "கவிதை பற்றிக் கதைப்போம்" எனும் கருத்தரங்கும், 25ஆம் திகதி காலை 9 மணிக்கு 'புனைகதையாளரோடு ஒரு பொழுது' எனும் கருத்தரங்கும் இடம் பெறும்.

மன்ற அரங்கில் மாலையில் 3 நாட்களும் சமூகத்துத் தமிழ் இலக்கிய அறிஞர்களின் சொற் பொழிவுகளும் விவாதப்பாட்டு, நாடகம், நடனம், தமிழிசை விருந்து, இலக்கிய இசை [illegible] நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (ஒ)

கடைசிப் பூசலை நினைக்க நித்திரையும் வருவதில்லை!

ஐ. தே. க. பொதுச் செயலர் கவலை

கொழும்பு, மே 19

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நிலவும் பூசல்களை நினைக்கும்போது தமக்கு இரவில் நித்திரை கூட வருவதில்லை என்று கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா தெரிவித்திருக்கிறார்.

தண்டு தண்டாகச் சிதறியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் ஐக்கியப்படுத்த வேண்டும் என்றும் அவர் ஒன்றில் தெரிவித்தார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பிரிவாகும். காமினி திஸாநாயக்கா, சரத் அமுனுகம ஆகியோர் எம்முடன் இணைந்து விட்டனர் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-எ-6)

நடைமுறைச் செலவினங்களுக்கு யாழ். ஆஸ்பத்திரிக்கு கூடுதல் நிதி வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 19

யாழ். போதனா வைத்தியசாலை நடைமுறைச் செலவினங்களுக்கு கூடுதல் நிதி வழங்க வேண்டும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரி பணிப்பாளர் செல்வி எம். மனோரத்தினம் தலைமையில் சென்ற குழுவினர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளனர்.

யாழ். ஆஸ்பத்திரி சம்பளம் மற்றும் நடைமுறை செலவினங்களுக்கு வழங்கப்பட்டு நிதி குறைக்கப்பட்டதால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக குழுவினர் எடுத்துக் கூறினர்.

கூடுதல் நிதி வழங்க சுகாதார அமைச்சு சம்மதம் அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரி எதிர் நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகள் குறித்தும் குழுவினர் விளக்கிக் கூறினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

நியமனம்

கொழும்பு, மே 19

நிட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அமைச்சுச் செயலாளராக டாக்டர் விக்ரம வீரசூரியா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே இவர் ஜனாதிபதியின் ஆலோசகர்களில் ஒருவராகவும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டார் என்பது தெரிந்ததே. (த-எ)

இலங்கைத் தமிழர் கொலை; மேன்முறையீட்டு விசாரணை

லண்டன் நீதிமன்றத்தில் ஆரம்பமானது

லண்டன் மே 19

எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் லண்டன் மாநகரில் மூன்று இலங்கைத் தமிழர்களைக் கொலை செய்ததாக இரண்டு இளங்கைத் தமிழ் இளைஞர்கள் மீது தொடரப்பட்டிருந்த வழக்கின் மேன்முறையீட்டு விசாரணை லண்டன் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

1986ஆம் ஆண்டில் லண்டன் நகரில் உள்ள வீடு ஒன்றின் மீது பெற்றோல் குண்டுவீசி அங்கு நித்திரையில் இருந்த மூன்று இலங்கைத் தமிழர்களைக் கொலை செய்ததாக சாம் குலசிங்கம், பிரேம் சிவலிங்கம் ஆகியோர் மீது லண்டன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

ஆறு ஆண்டுகளுக்கு முன் இவ்வழக்கில் எதிரிகளுக்குச் சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பு வழங்கப்பட்டது. இத் தீர்ப்பை எதிர்த்து எதிரிகள் மேன்முறையீடு செய்திருந்தனர்.

வழக்கு விசாரணை ஆரம்பமான முதல் இவ்விரு எதிரிகளும் தாம் இக் கொலைகளைச் செய்யவில்லை என்று வாதாடி வந்தனர்.

எதிரிகளில் ஒருவரான சாம் குலசிங்கம் தமது மேன்முறையீட்டு விண்ணப்பத்தை ஏற்கும்படி கோரி ஆறு தினங்களாக உண்ணாவிரதம் இருந்து வந்தார். அதனைத் தொடர்ந்து எதிரிகள் இருவரும் மேன்முறையீடு செய்ய பிரிட்டனில் உள்நாட்டு அமைச்சர் அனுமதியளித்தார்.

இறுதியாக இருவரின் மேன்முறையீட்டு மனுக்கள் மீதான விசாரணை லண்டன் நீதிமன்றம் ஒன்றில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இச்சம்பவம் தொடர்பான ஆரம்ப விசாரணைகளின் போது எதிரிகள் இருவரையும் லண்டன் பொலீஸ் அதிகாரிகள் தாக்கினார்கள் என்ற விஷயம் மேன்முறையீட்டு விசாரணையின் போது வெளியானது. (இ-எ-6)

கடைசி இஸ்ரேல் துருப்புகள் நேற்று காஸா, ஜெரிக்கோவிலிருந்து வாபஸ்!

பலஸ்தீன இளைஞர்கள் கற்கள், போத்தல்களை வீசி பிரியாவிடை

ஜெரிக்கோ, மே 19

இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையே 1967ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆறு நாள் யுத்தத்தின் போது கைப்பற்றப்பட்ட காஸா மற்றும் ஜெரிக்கோ பிரதேசங்களில் இருந்து கடைசி இஸ்ரேலியத் துருப்புகள் நேற்று வெளியேறின.

வாகனங்களில் ஏறி தங்கள் பயணத்தை ஆரம்பித்த இஸ்ரேலியத் துருப்புகள் மீது, ஆங்கு குழுமியிருந்த பலஸ்தீனிய இளைஞர்கள் கற்கள், போத்தல்கள் மற்றும் கையில் கிடைத்த பொருள்களை வீசினர். கூச்சலிட்டு நையாண்டி செய்தனர்.

இஸ்ரேலியத் துருப்புகள் பொறுமையை கடைப்பிடித்த தடன் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை மட்டுமே வெடிக்க வைத்தனர்.

பலஸ்தீனியர் மீது எக் கட்டத்திலும் இஸ்ரேலியத் துருப்பினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் இஸ்ரேலியர் விட்டுச் சென்ற முகாமுக்குள் பிரவேசித்த பலஸ்தீனப் பொலீஸ் படையினர் ஆகாயத்தை நோக்கிச் சுட்டு ஆரவாரம் செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களின் சிவில் நிர்வாகத்தை இஸ்ரேல் பலஸ்தீனியரிடம் ஒப்படைத்துள்ளது தெரிந்ததே.

எனினும் — அரபுப் பிரதேசத்தில் உள்ள யூதர் குடியிருப்புகளுக்கு பாதுகாப்பு வழங்க சிறிய எண்ணிக்கையில் இஸ்ரேலிய படையினர் நிலை கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

அணு ஆயுத நாடாக இந்தியா வரவேண்டும்!

கருத்துக் கணிப்பில் 84 வீத ஆதரவு

புதுடில்லி, மே 19

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் வாழும் மக்கள் மத்தியில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றில், 84 சதவீதமானோர் இந்தியா அணு ஆயுத நாடாக வேண்டும் என்ற விருப்பத்தை வெளியிட்டுள்ளனர்.

பிரதமர் நரசிம்மராவின் அமெரிக்க விஜயத்திற்கு முன்னோடியாக இக்கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

கருத்துக் கணிப்பின் முடிவை பயனியர் பத்திரிகை வெளியிட்டது.

அமெரிக்கா ஒரு பாகிஸ்தான் ஆதரவு நாடு என கருத்துக் கணிப்பில் 91 சத வீதமானோர் தெரிவித்துள்ளனர். (ஒ-எ)

யுத்தத்துக்கு எவரும் உடந்தையாகக் கூடாது

அமைச்சர் தயாரத்னா கூறுகிறார்

கொழும்பு மே 19

வடக்கு-கிழக்கில் இடம் பெற்றுவரும் கொடிய யுத்தத்துக்கு ஒருபோதும் எவரும் உடந்தையாக இருக்கக் கூடாது இப்படி அனைவரையும் மன்றாட்டமாக கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் பி. தயாரத்னா முன்னாண்டவாறு அம்பாறை நகரசபை மண்டபத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

இன்று அநாவசியமான யுத்தம் ஒன்றுக்காக பலகோடி ரூபா பணத்தை செலவுசெய்து வருகின்றோம். இதனை நாம் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார். (இ-எ-17)

புலிகளின் குரல் வானொலியில்

19 – 05 – 1994

வியாழன் இரவு

★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 — உரை "கவலத்தலும் மதிப்பிடுதலும்"
★ 8-20 — "உழைப்போம் உயர்வோம்" "சிறந்த காலத்தை உருவாக்கும் உட்கட்டுமானம்" சித்திரம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — ஏட்டிலிருந்து "மார்க்ஸ் முதல் மாசே துங்வரை என்ற நூலில் இருந்து கிழக்கு நாடுகளில் புரட்சி" எனும் கட்டுரையின் சில பகுதிகள்
★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

20 – 05 – 1994

வெள்ளி காலை

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — விடுதலைக்கானங்கள்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — விடுதலைக்கானங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

பருத்தித்துறைக்கு நேராக 'நரோமா' வர அனுமதிக்குக!

பாதுகாப்பு அமைச்சிடம் அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 19

'நரோமா' கப்பலை பருத்தித்துறை வரை சேவையில் ஈடுபடுத்த அனுமதி வழங்குமாறு யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பாதுகாப்பு அமைச்சைக் கோரியுள்ளார்

திருமலைக்கும்—காங்கேசன் துறைக்கும் இடையே சேவையில் ஈடுபட்டுவரும் 'நரோமா' கப்பலில் பயணம் செய்யும் வகையில் பருத்தித்துறையிலிருந்து காங்கேசன் துறைக்கு அழைத்து வரவும் இணைப்பு கப்பல் வசதி அவசியமாயுள்ளது.

இணைப்பு கப்பல் சேவை வழங்க பருத்தித்துறையில் வேறு கப்பல்கள் இல்லாத விடத்து தற்போது 'நரோமா' சேவையை ஒத்திவைக்கும் நிலை உள்ளது.

எனவே 'நரோமா' கப்பலை திருமலையில் இருந்து நேரே பருத்தித்துறை வரை சேவையில் ஈடுபடுத்துமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (ஒ-5)

இன விடுதலை வேண்டின் வன நடுதலை செய்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

இரண்டு அழகிய ஐப்பனீஸ் ஸ்பிறிங் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, கண்டி. (7393)

நல்லின இரண்டு மாத சேவல் குஞ்சுகளும் [விறாத்து நிலைக்குரியவை] சேட்டுக் குஞ்சுகளும், இறைச்சிக்கோழிகளும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மேஜர் பிரதாப், செட்டி பண்ணை, இராஜவீதி, கோப்பாய். [பி-8163]

தேவை

சுன்னாகத்திலே இயங்கி வரும் ஒரு தேநீர்சாலைக்கு பரிமாறுவோர் தேவை. கற்றாடலிலே இருப்பவர்கள் விரும்பத்தக்கது. விவரங்களுக்கு மே/பா 33, உதயன் சேவை நிலையம், 82, K.K.S. வீதி, சுன்னாகம். (7094)

பயிற்சி வினாத்தாள்கள்

A/L, O/L ஆண்டு 5 புலமைப்பரிசில் 8, 4, 5, 6, 7, 8, 9, 10 வகுப்புகளுக்கான ஒவ்வொரு மாதமும் எம்மால் வெளியிடப்படுகின்ற பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், புத்தகசாலைகள், ஆசிரியர்களுக்கு விசேட கழிவுண்டு. Bond, யாழ்ப்பாணம். (7365)

கோழிக்குஞ்சு விற்பனை

சிவப்பு, கறுப்பு, சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு, "மல்லிகா பதி", மானிப்பாய். (30948)

கணக்கியல்

கணக்கியல் நவீன கோட்பாடுகள் கணக்கியல் அடிப்படை குறிப்புக்கள் கணக்கியல் எண்ணக்கருக்கள் கணக்கீட்டு நியமனங்கள் சிறு குறிப்புக்கள் வேறுபடுத்தப்படும் பதங்கள் கணக்கீட்டு விகிதங்கள் ஆக்கம்: I. P. சதாரூபன் B. Sc விலை 30/-. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (பி-8208)

தவறிவிட்டது

மோட்டார் சைக்கிள் திறப்பும், அதிதுடன் காற்றடிக்கும் வால்வும், திறப்புக் கோர்வையும் சங்கத்தானைக்கும், மீசாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர் ஏனி சாவகச்சேரி நகரசபை பொது நூலகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (பி-8177)

எனது மூக்குக்கண்ணாடி உறையுடன் சுண்டிக்குளி வாசிகசாலைக்கும் குறுசோவ் வீதிக்கும் இடைப்பட்ட தூரத்தில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவுசெய்து சுண்டிக்குளி வாசிகசாலையில் தந்து உதவவும். கு. மாசில்லாமணி. (30942)

இன்று ராகு கேது மாற்றம

ஜூலை 2 வரை வியாழக்கிழமை, பெண்களின் ருது ஜாதக பலன்களும் ரூ. 10/-. புத்தம் புதிய வெளியீடு. எங்கும் விற்பனையாகின்றது. O/L, A/L மாதிரி வினாவிடைகளுக்கும் பாடசாலை உபகரணங்களுக்கும் வடிவேல் புத்தகசாலை, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (7095)

அதிபர்கள் கூட்டம்

வலிகாமம் மேற்கு மே 19 சங்கானை கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் கலந்து கொள்ளும் கூட்டம் ஒன்று இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற உள்ளது. (க-152)

பால் பாடசாலை கணக்கெடுப்பு

யாழ்ப்பாணம், மே 19

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்திலுள்ள பாலர் பாடசாலை பற்றிய கணக்கெடுப்பு ஒன்றை நடத்த வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு பணித்துள்ளதாக, சரவ பாலர் பாடசாலைகளினதும் பொறுப்பாசிரியர்கள் கல்விக் கோட்டத்தின் திட்டமிடல் பிரிவில் உரிய படிவத்தினைப் பெற்று நிரப்பித்தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ)

பயிலுநர் ஆசிரியர் தெரிவு
போட்டிப் பரீட்சைக்கான
விசேட பயிற்சி வகுப்புகள்

பாடநெறி: பொது விவேகம், பொது அறிவு

ஆரம்பம்: 21 - 05 - 1994
முற்பகல் 9-00 மணி

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ வகுப்புகள் - சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
★ நாளாந்தம் - மூன்று மணித்தியாலங்கள் முற்பகல் 9 — 12 மணி வரை
★ முழுப்பயிற்சி நெறிக்கான கட்டணம் ரூபா 250-00

அஸ்ரன் கல்வி நிலையம்
101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்)
[பி-8206]

EXHIBITION
CAKE and SUGAR GRAFT
யோகி ஹோம் சயன்ஸ் அக்கடமி
மாணவிகளால் நடத்தப்படும்
கேக், மாச்சீனி மலர் அலங்கார
கண்காட்சி

20-05-1994 வெள்ளிக்கிழமை
காலை 10 மணிக்கு
உயர்திரு க. மாணிக்கவாசகர்
அவர்களால்
(அரச அதிபர், யாழ்ப்பாணம்)
ஆரம்பித்து வைக்கப்படும்

தொடர்ந்தும்
21ஆம், 22ஆம், 23ஆம், 24ஆம்
திகதிகளில்
காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை
நடைபெறும்.

இதில் மேலைத்தேய, கீழைத்தேய நவீன கேக் வண்ணங்கள் பலவிதமான மாச்சீனி மலர் அலங்காரங்கள் காட்சிப்படுத்தப்படும்.

YOGI HOME SCIENCE ACADEMY
71-B NAYANMAR ROAD.
KACHCHERI NALLUR ROAD,
NALLUR, JAFFNA

கண்காட்சிக்கு ஆதரவு நல்குவோர்:
யாழ்ப்பாணம்-
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
[பி-8169]

பழைய மாணாக்கர் அவை

யாழ் பெரியபுலம் மகா வித்தியாலயத்தின்
பழைய மாணாக்கர் அவை
அமைப்புக் கூட்டம்

22 05 1994 ஞாயிற்றுக்கிழமை மு ப. 10-00 மணிக்கு பள்ளிக்கூட மண்டபத்தில் நடைபெறும்.

தவறாது பங்குபற்றுமாறு பழைய மாணாக்கரை அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ் பெரியபுலம் ம. வி.
யாழ்ப்பாணம்.

அமைப்புக்குழு,
பழைய மாணாக்கர் அவை.
(பி-8171)

10 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 10 — 11 — 1929
விண்ணுலகில் 06 — 06 — 1984

அமரர் Dr. க குகராஜா

தீதி: 19 05—1994

ஆண்டுகள் நகரட்டும்; உருவம் மறையட்டும்
எம் உள்ளம் இருக்கிறதே – இதில்
உங்கள் நினைவு நீங்காதிருக்கிறது.

ஆத்மா சாந்திக்கு பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.
பொலீஸ் நிலைய அருகாமை,
கொழும்பு.
(7093)

படையினரின் தாக்குதல்; அமைச்சுக்கு உடன் தகவல்

செஞ்சிலுவை மூலம் ஏற்பாடு

யாழ். மாவட்டத்தில் சிவிலியன் குடியிருப்புக்கள் மீது படையினர் மேற்கொள்ளும் தாக்குதல்கள் குறித்து உடனுக்குடன் பாதுகாப்பு அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாக்குதல்கள் குறித்தும், அதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்குறித்தும் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகம் உடனுக்குடன் கொழும்பு அலுவலகத்துக்கு தகவல் கொடுப்பதாகவும் —

கொழும்பு அலுவலக அதிகாரிகள் அது குறித்து உடன் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுக்கு எடுத்து கூறுவதாகவும் — செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி திரு. செற்றிக் பிரனா தெரிவித்தார்.

மானிப்பாய்
மருதடி விநாயகர் தேவஸ்தான
பாலஸ்தாபனமும் கும்பாபிஷேகமும்

துதி

திருவாக்கும் செய்கருமம் வைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
அதனால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் பவ வருடம் வைகாசித் திங்கள் 9ஆம் நாள் (23-05-94) திங்கட்கிழமை திருவோணநிதியும், அமிர்த யோகமும் சுவாதி நட்சத்திரமும் சோம வாரமும் கூடிய சுப நிமித்தம் காலை 10மணி முதல் 11மணி வரையில் உள்ள சுபலக்கின சுபமுகூர்த்தத்தில் பாலஸ்தாபனம் நடைபெற்று பவ வருடம் ஆனி மாதம் 16ஆம் திகதி (30-06-94) வியாழக்கிழமை சப்தமி திதியும் உத்திரட்டாதி நட்சத்திரமும் குரு ஓரையும் சித்தயோகமும் கூடிய காலை 5 55 முதல் 6-59 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற எல்லாம் வல்ல மருதடி விநாயகர் திருவருள் பாலித்துள்ளார்.

மகா கும்பாபிஷேக பிரதிஸ்டா குரு
தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ
சோமசுந்தர கௌரீஸ்வரக்குருக்கள்

★ மகா கும்பாபிஷேகத்திற்கு திருப்பணி நல்க விரும்பும் அடியவர்கள் ஆலயத்தில் நேரடியாகவோ அல்லது மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தாக்கள் சபை கணக்கு இலக்கம் T-2379, இலங்கைவங்கி, மானிப்பாய் என எழுதி காசோலை அல்லது வங்கி உண்டியலாகவோ ஆலயத்திற்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தனிப்பட்ட ரீதியில் எவருக்கும் ஆலய திருப்பணிகளுக்கு நிதி சேர்க்க அனுமதி வழங்கப்படவில்லை என்பதனையும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்,
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய-
தர்மகர்த்தாக்கள் சபை.
[30943]

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
வருடாந்தப் பொதுக் கூட்டம்

நாள்: 25 - 05 - 94 புதன்கிழமை
நேரம்: காலை 9 - 00 மணி
இடம்: சங்க மண்டபம்

சங்க உறுப்பினர்களைத் தவறாது சமுகந்தருமாறு வேண்டுகிறோம்.

கலாசாலை வீதி, திருநெல்வேலி.
சோ. பத்மநாதன்.
செயலாளர்.
(30947)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மணே நம:

திருமண அழைப்பு

நிகழும் பவ ஆண்டு வைகாசி மாதம் 06ஆம் நாள் (20-05-94) வெள்ளிக்கிழமை பகல் 12-00மணிமுதல் 12-57 மணிவரையுள்ள சுபயோக சுப முகூர்த்தத்தில்,

யாழ். நாச்சிமார் கோவிலடி
க. தெட்சணாமூர்த்தி (சோதி)
தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
ஜெயராம்
அவர்கள்

கொழும்பு
சு. கோபாலகிருஷ்ணன்
தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி
திருநிறை செல்வி
சிவகாமியை

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு வண்ணை அருள்மிகு ஸ்ரீமாமாகஷி அம்பாள் (நாச்சிமார் கோவில்) தேவஸ்தான திருமண மண்டபத்தில் நிகழவிருக்கும் திருமாங்கல்யதாரண வைபவங்களுக்கு எங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதி குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி க தெட்சணாமூர்த்தி (சோதி),
32, சோ. பொன் இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

திருமதி இராசமாள் பரமசிவம்,
78/7, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இரு வீட்டார் அழைப்பு

★ தனிப்பட்ட அழைப்பு இல்லை ★

(30877)

1993 ஆம் ஆண்டுக்கான தொழிநுட்பக் கல்லூரி
இறுதிப் பரீட்சைகள்

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சி நெறிகளுக்கான இறுதிப் பரீட்சைகள் நேரே குறிக்கப்பட்ட திகதிகளில் ஆரம்பமாகும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். இப்பரீட்சைக்கு விண்ண பித்தவர்கள் பரீட்சை கொடுக்கும் நிலைக்கு முதல் அனுமதி சம்பந்தப்பட்ட பகுதித் தலைவரைக் கொண்டு மாணவர் பிரவேச அனுமதிச் சீட்டுடன் தொடர்பு கொண்டு தமது நேரசூசி, பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பயிற்சி நெறிகள்	பரீட்சை ஆரம்பமாகும் திகதிகள்
1. உயர் தேசிய கணக்கியல் தகுதித் தேர்வு, 2ஆம் வருடம் (H N D A II) (பழைய/புதிய பாடத்திட்டம்) உயர் தேசிய வணிகவியல் தகுதித் தேர்வு, 2ஆம் வருடம் (H N D C. II) ஆங்கில தேசிய தராதரப் பத்திரம் (N C E) கணக்கீடுத் தொழிநுட்பவியலாளருக்கான தராதரப் பத்திரம் (N C.A T)	23 – 05 – 1994
2. உயர் தேசிய கணக்கியல் தகுதித் தேர்வு, 3ஆம் வருடம் (H N D.A. III (பழைய/புதிய பாடத்திட்டம்) தொழிநுட்பவியலில் தேசிய தராதரப் பத்திரம் (குடிசார், பொறிமுறை மின்னியல், கணிப அளவியல்) (N C T.)	06 – 06 – 1994
3. உயர் தேசிய கணக்கியல் தகுதித் தேர்வு, 4ஆம் வருடம் (டி-118) (H N D A. IV) (பழைய பாடத்திட்டம்) ஆங்கில தேசிய தகுதித் தேர்வு (N D.B) தேசிய கைப்பணி (தொழில்) தராதரப் பத்திரம் (Trade Courses) / படம் வரை பயிலுனர் தராதரப் பத்திரம் (D A.)	13 – 06 – 1994
4. வியாபாரக் கற்கைகளுக்கான தகுதித் தேர்வு (N D B.S.) வியாபாரக் கற்கைகளுக்கான தேசிய தராதரப் பத்திரம் N.C B S) உயர் தேசிய வணிகத் தகுதித் தேர்வு 3ஆம், 4ஆம் வருடங்கள் (H N D.C. III, IV)	20 – 06 – 1994

க. ஜெயரத்தினம்.
அதிபர்,
தொழிநுட்பக் கல்லூரி.
பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்.
1994 - 05 - 17
(30944)

உரும்பிராய்
பறுவதபத்தினி அம்மன் ஆலய
5ஆம் திருவிழா விஞ்ஞாபனம்
19 – 05 – 1994 வியாழக்கிழமை

மேற்படி ஆலயத்தில் பகல் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், விஷேட [மேளக் கச்சேரியும் இடம் பெறும்.

மாலையில் அம்பாள் அன்னப்பக்கியில் வீதி உலா வரும் காட்சியை அடியார்கள் கண்டு களிக்கும் படியும் இதைத் தொடர்ந்து நாதஸ்வர, தவில் கச்சேரிகளும், இன்னிசை கானங்களும் இடம் பெற இருப்பதால் அனைவரையும் 5ஆவது உபயகாரர் அன்புடன் அழைக்கிறார்கள்.

நாதஸ்வர தவில் கச்சேரிகள்
திரு. என். ஆர். சின்னராசா புதல்வர் குழுவினர்
திரு. சுந்தரமூர்த்தி குழுவினர்
திரு. உதயநாதன் குழுவினர்
திரு. நித்தியானந்தன் தவில்
திரு. கோவிந்தசாமி புதல்வர் குழுவினர்

இன்னிசை விருந்து
இந்த மண் எங்களின் சொந்த மண் புகழ்
சாந்தன் குழுவினர்
இவருடன் இணைந்து
திருமதி பார்வதி சிவபாதம்
அவர்களும் பாடுவார்கள்
(ஒலி, ஒளி தீவகம்) உரிமையாளர்: சந்தஞாவி

இங்ஙனம்,
உரும்பிராய் வடக்கு வாழ் மக்கள்.

விளம்பர அன்பளிப்பு:
நித்தியாஸ் பாடசாலை சேவை உரும்பிராய்.
பிரபா பல்பொருள் வர்த்தக நிலையம் உரும்பிராய் சந்தி.
[30950]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

இடமாற்றத்துக்கு தடை ஏன்?

கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் அரசாங்க ஊழியர்கள் வேறு மாகாணங்களுக்கு இடமாற்றம் பெறுவதற்கு நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது.

இடமாற்றம் கோரி விண்ணப்பிக்கும் ஊழியர்களின் பிரிவுகளில், அவர்களுக்குப் பதிலாக பணிபுரிவதற்கு வேறு ஊழியர்கள் இருந்தால் மட்டுமே, சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும். மாறாக ஊழியர் வசதி இல்லையெனில் இடமாற்ற விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளாது ஒரு வருடத்துக்கு இடை நிறுத்தி வைக்க வேண்டும் என்பது பொது நிர்வாக அமைச்சின் முடிவு.

அரசாங்க ஊழியர் குறிப்பிட்ட ஒரு பகுதியில் நான்கு வருடங்கள் பணி புரிந்தால், வேறு இடங்களுக்கு மாறிச் செல்ல கடமையாற்றுவதற்கு வசதி உண்டு. அதனை அரச ஊழியர்களுக்குரிய ஓர் உரிமையாகக் கருதமுடியாது. அது வெறும் சலுகையே. அரச சேவை பாதிக்கப்படாமல் இருக்கும் விதத்தில் இடமாற்றம் வழங்குவதா இல்லையா என்பதனைத் தீர்மானிக்கும் அதிகாரம் அரசுக்கே உண்டு.

அந்த வகையில் தான் கிழக்கு மாகாணத்திலிருந்து இடமாற்றம் கோரவுள்ள அரச ஊழியர்களின் விண்ணப்பங்களை ஏற்காமல் இடைநிறுத்தி வைக்குமாறு பொது நிர்வாக அமைச்சு பணித்துள்ளது என்பதனை எவரும் இலகுவில் புரிந்து கொள்ள முடியும். (இந்த உத்தரவை ஒரு வித தடையாகவும் கருதலாம்)

ஆனால் குறிப்பாக கிழக்கில் பணிபுரியும் அரச ஊழியர்களின் இடமாற்றத்துக்கு மட்டும் நிபந்தனை — தடை— விதிக்கப்படுவது ஏன்? அங்கிருந்து இடமாற்றம் பெறுவதற்குப் பெரும் எண்ணிக்கையான அரச ஊழியர்கள் விண்ணப்பித்த உள்ளனர் என்பதனை அரசாங்கம் அறிந்து விட்டது என்பதே அர்த்தம்.

கிழக்கு மாகாண மக்களுக்குரிய அரசசேவை பாதிக்கப்படாதிருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு பொது நிர்வாக அமைச்சு இந்தத் தடையை விதித்தாகக் கூறக் கூடும்.

ஆனால் ..

பெரும் எண்ணிக்கையான அரச ஊழியர்கள் வெளி மாகாணங்களுக்கு இடம் மாற விரும்புவது ஏன் என்ற வினாவே இங்கு முக்கியமானது. அங்கு பணிபுரிவோரில் பெரும்பான்மையினர் வெளிமாகாணங்களைச் சேர்ந்தவர்கள் என்பது ஒரு காரணமாகவும் இருக்கலாம்.

எனினும், மற்றொரு பிரதான காரணமும் உண்டு என்பதே உண்மை. இடமாற்றத்துக்குத் தடை விதிக்கும் முடிவுக்கு அடிப்படையும் அதுவே. கிழக்கில் இப்போது அரச சிவில் நிர்வாகம் நடப்பதாக வெளியே பிரமாதமாகக் காட்டிக் கொள்ளப்பட்ட போதிலும்—

அங்கு இராணுவ ஆட்சியே நடக்கிறது. சிவில் நிர்வாகத்தில் இராணுவ அதிகாரிகளின் கையீடு அங்கு பெரிதாக உள்ளது. சரியாகச் சொல்வதானால் இராணுவத்தினரின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பவே சிவில் உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் கடமையாற்ற வேண்டி உள்ளது. சிவில் நிர்வாக விதிமுறைகள், நடைமுறைகள் ஒரு பக்கம் இருக்க, இராணுவ அதிகாரத்தினதின் உத்தரவுகளை ஏற்றே உயர் சிவில் அதிகாரிகள் கூட பணியாற்ற வேண்டி இருக்கிறது.

இராணுவ அதிகாரிகளின் இந்த மேலாண்மைத் தன்மைக்குத் தட்டிக் கேட்கவோ, எதிர்த்து நிற்கவோ, அரச மேலிடத்துக்கு எடுத்துச் சொல்லவோ சிவில் அதிகாரிகளுக்கு ஏது பலம்? அவ்வாறு செய்தால் இராணுவப் பழிவாங்கலுக்கும், தொல்லைகளுக்கும் ஆளாக நேரிடும்.

அதனாலேயே பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்ற உணர்வுடன் அரச ஊழியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல விரும்புகிறார்கள். இடமாற்றத்துக்கும் பெரும் எண்ணிக்கையில் விண்ணப்பிப்பார்கள் என்று அரசும் எதிர்பார்க்கிறது!

கிழக்கில் 10 ஒரு ங்கள் சேவை செய்த ல சலுகை!

பொதுநிர்வாக அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,மே 19

கிழக்கு மாகாணத்தில் பதினாறு வருடங்கள் சேவை செய்ய முன்வருபவர்களுக்கு மேலும் சலுகை அளிக்க பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண அமைச்சு முன்வந்திருக்கிறது.

கிழக்கு மாகாண அரச வெற்றிடங்களை நிரப்புவதற்கென நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் குறைந்த புள்ளிகள் பெற்றிருந்தாலும் விண்ணப்பதாரர் பதினாறு வருடங்கள் தொடர்ச்சியாக பணிபுரிய முன்வரின் அவருக்கு நியமனம் வழங்கப்படும் என்றும்—

இதற்காக போட்டிப் பரீட்சையில் எடுக்க வேண்டிய 110புள்ளிகள் 80புள்ளிகள் ஆகக் குறைக்கப்பட்டிருப்பதாகவும் வடக்கு-கிழக்கு மாகாண உள்துறை அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

நியமனக் கடிதம் வழங்கப்பட்டதினத்திலிருந்து இருவாரங்களுக்குள் விண்ணப்பதாரர் பதவி ஏற்கவேண்டும் இரு வாரங்களுக்குள் நியமனம் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் நியமனம் ரத்துச் செய்யப்படும் என்றும் அவருக்குப் பதிலாக பட்டியலில் உள்ள அடுத்த ஆள் அப்பதவிக்கு நியமனம் செய்யப்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியமிக்கப் பட்ட ஊழியருக்கு இடமாற்றம் வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

நான் கொலைகாரன் அல்லன் சொத்தி உபாலி கூறுகிறார்!

"நான் எவரையும் கொலையும் இல்லை, கொள்ளையடிக்கவும் இல்லை. எனக்கு எதிராகச் செயற்படும் — என்னைக் கொலை செய்ய முயற்சி செய்யும் ஒருவர் — இதுவரை 47 கொலைகளைச் செய்துள்ளார். ஆனால் வெளியாகியிருப்பது எத்தனை? உண்மை ஒரு நாள் வெளியாகும்.".

இப்படிக் கூறியுள்ளார் சொத்தி உபாலி.

கட்டுகஸ்தோட்டையில் வைத்து பொலீஸாரால் வைது செய்யப்பட்ட பின்னர் அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நான் இதுவரை எந்தவித கொலைகளையோ, கொள்ளைகளையோ செய்யவில்லை. எனது வாழ்வை வெட்டி காயப்படுத்தியவனையே மன்னித்துவிட்டேன்.

நான் குற்றவாளி என்பதற்காக மறைந்திருக்கவில்லை. எனது பாதுகாப்புக்காகவே மறைந்திருந்தேன்.

பொலீஸார் விசாரணை செய்தால் எல்லா உண்மைகளையும் வெளியிடுவேன். வைது செய்யப்படாமல் இருந்திருந்தால் வெளிநாட்டுக்குத் தப்பிப்போய் "பாதாள உலகம்!' பற்றி தெரிந்த எல்லாவற்றையும் வெளியிட்டிருப்பேன்.

என்மீது விண்பழி சுமத்தவும், அமைச்சர் ஒருவருக்கு வெட்ட பெயர் உண்டு பண்ணவும் சிலர் முயற்சி செய்கின்றனர் — என்றார். (ஒ-3)

மலையகத்தில்

ஜி.சி.ஈ. சாதாரணதர சித்தி பெற்றோருக்கு ஆசிரியர் பதவி

கொழும்பு, மே 19

ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்காக மலையகத்தில் ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கும் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட உள்ளன. ஆனால் இப்படி நியமிக்கப்படுபவர்கள் உடனடியாக நிரந்தரமாக்கப் படமாட்டார்கள். ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் அவர்கள் சித்திபெற்றால் மட்டுமே நிரந்தரமாக்கப்படுவார்கள்.

கல்வி கணிசார தேசிய வளர்ச்சித்துறை, தொழில் நுட்பக் கல்வி அமைச்சர் டபிள்யூ ஜே எம். லொக்கு பண்டார மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குமுகமாக பட்டதாரிகள் அனைவருக்குமே ஆசிரியர் நியமனம் வழங்க ஜனாதிபதி அனுமதி அளித்துள்ளார் என்றும் —

30ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட உள்ளனர் என்றும் —

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்தோரே இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம் என்றும்—

ஆனால் மலையகத்தில் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்தோர் குறைவாக இருப்பதால் ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட உள்ள என்றும்— அவர் தெரிவித்தார். (இ)

யேமனில் இருந்து இலங்கையர் வெளியேற இந்தியா உதவும்

கொழும்பு, மே 19

தற்போது உள்நாட்டு யுத்தம் நடைபெறும் யேமன் நாட்டில் சிக்கியிருக்கும் இலங்கையர்களை அங்கிருந்து வெளியேற்ற இந்தியாவின் உதவி கோரப்பட்டுள்ளது

இது தொடர்பாக இலங்கை வெளியுறவு அமைச்சு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள இந்திய உயர் விதானி காரியாலயத்துடன் தொடர்பு கொண்டது.

இதனையடுத்த உடனடியாக யேமனில் உள்ள இந்திய தூதருடன் தொடர்பு கொண்டு இலங்கையர்களை திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யேமனில் இருந்து கப்பல் மூலம் பம்பாய்க்கு அழைத்து வரப்படும் இலங்கையர்கள், பின்னர் அங்கிருந்து எயர் இந்தியா விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவர். (ச)

வடக்கு - கிழக்கில்

53 ஆயிரம் குடும்பங்களுக்கு வறுமை நிவாரணநிதி தேவை

கொழும்பு மே 19

வடக்கு - கிழக்கில் வறுமை நிவாரண நிதி தேவைப்படும் 53 ஆயிரத்து 185 குடும்பங்கள் இருப்பதாக கொழும்பில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தலைமையில் நடைபெற்ற உயர் நிலை மாநாடு ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

உரிய நிவாரண நிதி இக் குடும்பங்களுக்கு கிடைப்பதாக இல்லை என்று இம்மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. இவர்களின் ஏனைய பகுதிகளில் உரிய வறுமை நிவாரண நிதி கிடைக்காது வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை 36 ஆயிரத்து 815 என்றும் தெரிவிக்கப்பட்டது.

700 ரூபாவுக்குக் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மாதம் 500 ரூபா நிதியுதவி வழங்குவதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்படுவது முக்கியம் என்று இம்மாநாட்டில் கலந்து கொண்ட முக்கிய அமைச்சர் ஒருவர் வலியுறுத்தினார்.

கஷ்டப்படுவோருக்கு தேவையான நிதியைப் பெற்றுக் கொடுப்பது பற்றி ஆராயப்படுவதாக மாநாட்டில் ஜனாதிபதி கூறினார்.

வரிகளை உயர்த்தியோ, பொருள்களின் விலைகளைக் கூட்டியோ நிவாரணநிதி தொகையைப் பெற முடியாது என்று தெரிவித்த ஜனாதிபதி குறைந்த பட்சம் வங்கிகள் மூலமோ அல்லது கடன் விநியோகம் [illegible] யான நிதியைப் பெற்றுக் கொடுப்பது [illegible] என்றும் கூறினார். (த-எ)

அடிப்படை உரிமை மீறல்:

ஆறு பொலீஸாருக்கு எதிராக குற்றவியல் வழக்கு தாக்கல்

கொழும்பு, மே 19

அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றில் உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து, எம்பிலிப்பிட்டிய பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த ஆறு பொலீஸாருக்கு எதிராக குற்றவியல் வழக்கு ஒன்றை சட்டமா அதிபர் எம்பிலிப்பிட்டிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார்:

உயர் நீதிமன்றம் அந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கில் ஆறு பொலீஸ் அதிகாரிகளும் பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் மீறியுள்ளதாகக் கூறியதுடன், சம்பந்தப்பட்ட ஆறு பொலீஸார் மீது விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கும்படி சட்டமா அதிபரைக் கேட்டுக் கொண்டது.

உயர் நீதிமன்றத்தின் இந்த உத்தரவை ஏற்று சட்டமா அதிபர் பொலீஸ் அதிகாரிகள் மீது குற்றவியல் வழக்கு ஒன்றை தாக்கல் செய்தது இதுவே முதல் தடவை என்று அரச சட்டத் தரணி யஸந்த கொடகொட எம்பிலிப்பிட்டி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

19 - 10 - 1990 இல் எம்பிலிப்பிட்டி கடதாசி ஆலையின் பிரதம பாதுகாப்பு அதிகாரி விமல் வித்யாமணியை கடத்தியது, சட்ட விரோதமாகத் தடுத்து வைத்தது, அவரை சித்திரவதை செய்தது ஆகிய குற்றச்சாட்டுகள் ஆறு பொலீஸ் அதிகாரிகள் மீதும் சட்டமா அதிபர் சுமத்தியுள்ளார்.

எதிரிகளில் ஒருவர் சப் இன்ஸ்பெக்டர், இருவர் சார்ஜன்டுகள், மூவர் கான்ஸ்டபிள்கள் ஆவர் என்று தெரிவிக்கப்பட்டது.

அடிப்படை உரிமை மீறல் மனு மீதான தனது தீர்ப்பில் —

சட்ட விரோதக் கைதுக்காக 15 ஆயிரம் ரூபாவும், சட்ட விரோதமாகத் தடுத்து வைத்ததற்காக 20 ஆயிரம் ரூபாவும், சித்திரவதை செய்ததற்காக 35 ஆயிரம் ரூபாவும் நட்டஈடாக முறைப் பாட்டுக்காரரான விதியாமணிக்கு வழங்கப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எதிரிகள் அனைவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். விசாரணையை அடுத்த மாதம் 14ஆம் திகதி எம்பிலிப்பிட்டி நீதிவான் பி. ரணசிங்கா ஒத்திவைத்தார்.

தலையில் பலாக்காய் விழுந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், மே 19

பலாக்காய்பிடுங்கிக் கொண்டிருந்த சமயம் பலாக்காய் தவறிப் பிடுங்கியவரின் தலையில்விழுந்ததுவர் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும்சிகிச்சை பலனளிக்காத நிலையில் கடந்த திங்கள் அவர் மரணமானார்.

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த நாகமுத்து நல்லலிங்கம்(வயது 55) என்பவரேமரணமானவர் ஆவர். (ஒ-15)

சாரதா சேவாச்சிரமம் புலமைப்பரிசில்

தெண்மராட்சி, மே 19

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமப் பொறுப்பாளர் சித்ருபானந்த சுவாமிஜி புலமைப்பரிசிலுக்கான ஒரு தொகை நிதியை சாவகச்சேரி மகளிர்கல்லூரி அதிபர் செல்வி சி. வீரசிங்கத்திடம் வழங்கி உள்ளார்.

ஆண்டுப்பரீட்சையில் கூடுதல் புள்ளிகளைப் பெறும் மூன்று மாணவிகளுக்கு இந்த புலமைப் பரிசில் வழங்கப்படும். (இ-117)

கைதடி நவீனடிடி சாரணியபயிற்சி

யாழ்ப்பாணம், மே 19

வடபகுதியில் சாரணிய பயிற்சி பெற்ற தலைவர்களுக்கு வழங்கப்படும் உயர் பயிற்சியான தருசின்னப் பயிற்சி கைதடி நவீனடிடி பாடசாலையில் நடத்தப்படவுள்ளது.

குருளைச் சாரணர் தலைவருக்குரிய பயிற்சி ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதியிலிருந்து 16ஆம் திகதி வரையும் —

சாரணர் தலைவருக்குரிய பயிற்சி ஆகஸ்ட் மாதம் 18ஆம் திகதியிலிருந்து 26ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளன.

பயிற்சித் தலைமைக்காரத் திரு. கோ. செல்வநாயகம் கடமையாற்றுவார்.

இலங்கை சாரணியசங்கம் ஆரம்பித்த நாளிலிருந்து இப்பயிற்சிகள் மிகிமை, நுவரெலியா ஆகிய இடங்களில் தான் நடைபெற்று வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

அமிட் நேற்று ராஜினாமா; சபையில் பிரியாவிடை!

கொழும்பு, மே. 19

ஐக்கிய தேசியக் கட்சியில் தேசியப்பட்டியல் எம்.பியான ஜனாப் எம். எச். அமிட் நேற்றுக் காலை தமது பதவியை ராஜினாமாச் செய்தார்.

நேற்று அவர் நாடாளுமன்றத்தில் பிரியாவிடை உரையாற்றினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நலனைக்கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கையை தாம் எடுத்ததாக பிரியாவிடை உரையில் அவர் தெரிவித்தார்

வடக்கு — கிழக்கு பிரச்சினை, வறுமை ஒழிப்பு ஆகிய இரு முக்கியமான பிரச்சினைகளை நாடு எதிர்நோக்கியுள்ளது இந்தப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கட்சி பேதம் இல்லாமல் அனைவரும் கைகோர்த்துச் செயற்பட வேண்டும் என்றும் ஜனாப் அமிட் கூறினார்.

கட்சியின் நலனைக் கருத்திற் கொண்டு தமது பதவியை ராஜினாமாச் செய்ததற்காக ஆளும் கட்சி உறுப்பினர்கள் அவரைப் பாராட்டினார்கள்

வீரவணக்க கூட்டம்

தெண்மராட்சி மே 19

விடுதலைப் போராட்டத்தில் மே மாதத்தில் வீரமரணமடைந்த கொடிகாமம் வட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று 19ஆம் திகதி மாலை 6மணிக்கு கச்சாய கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் நடைபெறும். (க - 117)

அப்பியாச கொப்பிகள்

தெண்மராட்சி மே 19

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க புத்தகக் கடையில் அப்பியாசக் கொப்பிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. (ஒ-117)

வேலை நீக்கம் செய்யப்படும்

கிராம சேவையாளர் மீது 3 மாதத்துக்குள் விசாரணை

கொழும்பு, மே 19

தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட கிராம சேவை அதிகாரிகள் மீது 3 மாதங்களுக்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாத விடத்து, அவர்களை மீண்டும் உடனடியாக வேலைக்குச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு இது தொடர்பான சுற்றறிக்கையை அனுப்பி வைத்துள்ளது.

இதன்படி — எந்த ஒரு கிராமசேவை அதிகாரியும் சேவையில் இருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டதும், அவர் புரிந்த தவறுகள் பற்றிய குற்றப்பத்திரிகை அவருக்கு மூன்று மாதங்களுக்குள் வழங்கப்பட வேண்டும். இல்லையேல் அவரை சேவையில் இருந்து இடைநிறுத்தம் உத்தரவு தாமாகவே இல்லாதொழிந்ததாக கருதப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ-17)

பதவி வெற்றிடம் பற்றிய விவரம் பத்திரிகைகளில்

வெள்ளிக்கிழமைகளில் வெளிவரும்

கொழும்பு, மே 19

அரச திணைக்களங்களில் ஏற்படும் வெற்றிடங்கள் தொடர்பாக இனிமேல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பத்திரிகைகளில் விவரங்கள் வெளியிடப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

அரச வெற்றிடங்கள் தொடர்பான விவரங்களைக் கொண்டு வரும் அரச வர்த்தமானி உரிய காலத்தில் நாட்டின் சகல இடங்களிலும் ஒரே நேரத்தில் கிடைப்பதாக இல்லை.

மற்றும் அரச வர்த்தமானி 18 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாலும் பதவி வெற்றிடங்கள் தொடர்பான விவரங்களை வெள்ளி தோறும் பத்திரிகைகளில் வெளியிடுவது என்று அரசு தீர்மானித்துப்பதாக கொள்கை திட்டமிடல் அமைச்சின் செயலாளர் டாக்டர் விக்ரமவீர சூரியா தெரிவித்தார்.

சுயதொழில் வாய்ப்புக் கடன்

யாழ்ப்பாணம், மே 19

இன்றைய சூழ்நிலையினால் வருமானங்களைத் இழந்துள்ள அல்லது வருமானங்கள் போதா நிலையிலுள்ள குடும்பங்களிடமிருந்து சுய தொழில் வாய்ப்புக் கடன்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் [illegible] கடன் [illegible] வாய்ப்புக்கடன் திட்டத்தின் கீழ் [illegible] நெற்செய்கைக் கடன், கோழி வளர்ப்புக் கடன், உருளைக் கிழங்குக் கடன் ஆகிய திட்டங்களின் மீள் அறவீடுகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு மீளப் பெறப்பட்ட கடன்களை புதிய பயனாளிகளுக்கு கொடுக்கவே இவ் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதுவரை வலிகாமம் வட்டத்தில் 75 பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. [எ]

மரணப்படைத்தலைவர் சொத்தி உபாலி

அரசியல்வாதிகளுடனான தொடர்பு பற்றி விசாரணை

கொழும்பு, மே 19

'பாதாள உலக' மரணப் படைத் தலைவர் என்று கருதப்படும் சொத்தி உபாலி அரசியல் வாதிகள், பொலீஸ் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு படையினருடன் வைத்திருந்த தொடர்புகள் அனைத்தும் விசாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தி உபாலிக்கு அரசியல் மற்றும் பொலீஸ் தொடர்புகள் உள்ளதென்றும் பொலீஸ் அதிகாரிகளை கேற் போட்டி அரசுச் செய்தி நிறுவனமான ஸின்ஹுவாத் தகவல் வெளியிட்டிருக்கிறது.

அவசர காலச் சட்ட விதிகளின் கீழ்வரை செய்யப்பட்டுள்ள சொத்தி உபாலி நீதிமன்றத்தில் ஒருவார காலத்துக்கு ஆஜர் செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

விவசாயிகளுக்கு

ரூ. 500 பெறுமதியான பசளை இலவசம்

கொழும்பு மே 19

எதிர்வரும் பெரும்போக நெற்செய்கையின்போது ஐந்து ஏக்கருக்குக் குறைவான நெற் செய்கையை மேற்கொள்ளும் விவசாயி ஒவ்வொருவருக்கும் 500 ரூபா பெறுமதியான பசளையை இலவசமாக வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதி விஜேதுங்கா கடந்த மேதினமன்று அறிவித்த நிவாரணத் திட்டத்தின் கீழ் இது வழங்கப்படும் என்று விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைச்சர் தர்மதாஸ பண்டா அறிவித்திருக்கிறார்.

தகுதியுள்ள விவசாயிகள் அனைவரும் இந்த இலவசப் பசளைக்குரிய 500 ரூபா வவுச்சரை அந்தந்த பிரதேச செயலகத்தில் இருந்து பெற்று அருகில் உள்ள பசளை விற்பனை நிலையத்தில் சமர்ப்பித்து பசளையைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. [த-எ]

துப்பாக்கிகள் வைத்திருப்பது தொடர்பாக சட்ட திருத்தம்

கொழும்பு மே 19

துப்பாக்கிகளை வைத்திருப்பது சம்பந்தமான சட்ட விதிகளுக்கு திருத்தப்பட உள்ளது.

பொதுமக்கள் துப்பாக்கிகள் வைத்திருப்பதை கட்டுப்படுத்துவதும் இச் சட்டத்துக் கமைய ஆயுதங்களை வைத்திருந்தவர்களுக்கு எதிரான அபராதம், தண்டனை போன்றவற்றை அதிகரிப்பதும் இதன் நோக்கமாகும்.

குறிப்பாக சட்டவிரோத ஆயுதங்கள் வைத்திருப்பவர்களுக்கு இந்த நடவடிக்கைகள் பொருந்தும். பாதுகாப்பு அமைச்சு மாத்திரமே இவை எதிர்காலத்தில் துப்பாக்கிகள் போன்றவை வைத்திருக்க அனுமதி வழங்க முடியும்.

பொதுமக்களுக்கு மிகவும் முக்கியமானகும்நிலையிலேயே இந்தவை அனுமதி வழங்கப்படும். வேறு எந்தக் காரணங்களுக்காகவும் அனுமதிகள் வழங்கப்பட மாட்டா.

1977 ஆம் ஆண்டு இடம் பெற்ற பயங்கரவாத வன்செயல்களைத் தொடர்ந்து தம்மிடம் உள்ள துப்பாக்கிகளை பொலீஸ் நிலையங்களிலோ அல்லது படையினரிடமோ ஒப்படைக்கும்படி பொது மக்கள் கேட்கப்பட்டிருந்தனர்.

உள்நாட்டு பாதுகாப்பு நிலைமையை கருத்தில் கொண்டு இந்த ஆயுதங்களை திருப்பி கொடுப்பதில்லை என்பது அரசின் கொள்கையாகும் என்று அறிவிக்கப்படுகிறது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

காலஞ்சென்ற

செல்வரெட்ணம் தியடோர்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

[30955] நண்பர்கள், அனுதாபிகள்

மரண அறிவித்தல்கள்

செல்வரெட்ணம் தியடோர்

(இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர்)

செல்வரெட்ணம் தியடோர் காலமானார். இவர் காலஞ்சென்ற தியடோர் (ஆசிரியர் புனித சம்பத்திரிசியர் கல்லூரி), தங்கரட்ணம் ஆகியோரின் அன்பு மகனும், தங்கமணியின் அன்புக் கணவனும், செல்வச்சந்திரன், சேளி, சிந்தியா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜீவரெட்ணம், அழகரெட்ணம், கமலா, லீலா மற்றும் பேபி, ஜெயா, குணரெட்ணம், நவரெட்ணம், பாலரெட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரெட்ணராஜா, S. S. ஜோசப் (இளைப்பாறிய பிரதி பொலிஸ் மா - அதிபர்), மேஜர் எரிக் ஜோசப், கிறகரி ஜோசப்(அமெரிக்கா), தங்கரெட்ணம், காலம்சென்ற செல்வரெட்ணம் (பொலிஸ் அத்தியட்சகர்), றோசரெட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரூபாவின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 19 - 05 - 94 மாலை 4.00 மணிக்கு யாழ் புனித அடைக்கல மாதா கோவிலில் திருப்பலியுடன் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்

சென் பீற்றஸ் வேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (30954)

திருமதி

இரத்தினேஸ்வரி கோபாலசிங்கம்

குமரகோட்டம் கோண்டாவிலைச் சேர்ந்த இரத்தினேஸ்வரி கோபாலசிங்கம் 18 – 5 – 94 அன்று காலமானார். இவர் சொக்கலிங்கம் கோபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகலிங்கத்தினதும்-திருமதி செல்லம்மா நாகலிங்கத்தினதும் அன்பு மகளும், ஜெயமோகன், ஜெயகோபன் ஜெயரூபன், ஜெ பரன், ஜெயநந்தன், ஜெயவாசுகி, ஜெயவைரசி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சொக்கலிங்கத்தினதும் – திருமதி ஆச்சிமுத்து சொக்கலிங்கத்தினதும் மருமகளும், தங்கராஜா, இராசேஸ்வரி, நடராஜா, யோகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சின்னத்துரை, தியாகராஜா, கனகாம்பிகை, இராசமணி, மாலைக்கமி விஜயலட்சுமி சிவரத்தினம், புவனேஸ்வரி, கோதண்டன், புஸ்பராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (19-5-94) நண்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வாரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா தங்கராஜா (சகோதரன்)

குமரகோட்டம்,
கோண்டாவில் (30961)

சுந்தரபிள்ளை விக்னராஜா

அளவெட்டி வடக்கு இலவடியைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை விக்னராஜா (பண்டாரவளை கிரேக் எஸ்ரேற் மகனாரின் Tea-maker) 15-05-94 இல் கொழும்பில் காலமானார்

இவர் சாரதாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை, திருமதி செல்லம்மா சுந்தரம்பிள்ளையின் ஏகபுத்திரனும் திரு திருமதி சிதம்பரப்பிள்ளை (தெல்லிப்பழை) அவர்களின் மருமகனும், அபிராமி (ராமநாதன் இந்துக் கல்லூரி), நிதுடன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), ராஜமாதங்கி, மைத்ரேயினியின் அன்புத் தந்தையும், தேவிகாராணி (லண்டன்), இந்திராணி (அவுஸ்திரேலியா), கமலராணி (அவுஸ்திரேலியா), பத்மராணி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தணிகசபாபதி (லண்டன்), பக்தநாதன் (அவுஸ்திரேலியா), சதீஸ்குமாரன் (அவுஸ்திரேலியா), இராமநாதன் (Grandmet Travels), பாலகிருஷ்ணன் (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), சதிரமலைநாதன் (ஜேர்மனி), பாலசுப்ரமணியம் (கனடா), சித்திரா (கனடா) ஆகியோரின் மைத்துனரும், தமயந்தி (லண்டன்), வைஜெயந்தி (லண்டன்), நிமலன் (லண்டன்), சஜாதன் (லண்டன்), பவிதன் (லண்டன்), கோதை (அவுஸ்திரேலியா), கவன் (அவுஸ்திரேலியா), தீபன் (அவுஸ்திரேலியா) சிவானுஷா, அபிஜன், சுதயா, மதனன், மயூரன், பிரேமலன் துஷி ஆகியோரின் அன்பு மாமனாரும், சாயிப் (கனடா) ஆகியோரின் அன்பு பெரிய பாவும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் திங்கட்கிழமை (16-5-94) மாலை 4 மணிக்கு அப்பாரவை (ஜெயரட்ண பாணியில் இருந்து கனடாவை இந்துமயான திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக் கிரியை நடைபெற்ற இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

தகவல்:
எஸ் பாலகிருஷ்ணன்

சுழிபுரம். (7394)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற் லிமிட்டெட்டினால் யாழ் பட்டணம், நாவலர் வீதி 292/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19 - 05 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

இன்று

முதறிஞர் அமரர் க. சி. குலரத்தினம் நினைவுப் பணி மன்றம் இன்று வியாழக்கிழமை மாலை 5. 00மணிக்கு கல்வியங்காட்டில் "முதறிஞர் க. சி. குலரத்தினம் நூலகம்" ஒன்றை திறக்கவுள்ளது. மன்றத்தலைவர் திரு. க. சிதம்பரநாதன் தலைமையில் மிக்க வயோதிபர் கலாநிதி க. கனகராசா நூலகத்தைத் திறந்து வைப்பார். (க – 30)

★ ★ ★

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நடத்தப்படும் மரநடுகைப் போட்டித் திட்டத்தின் ஓராண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பும் இன்று யாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். (க)

★ ★ ★

அராலி இந்துக் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று மாலை 5மணியளவில் கல்லூரி அரங்கில் அதிபர் திரு எஸ்.செல்வராசா தலைமையில் நடைபெறும்.

யாழ் கல்வித் திணைக்களவலயம் இரண்டின் பிரதிப் கல்விப்பணிப்பாளர் திரு சோசி வேலாயுதம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் (ஒ)

தாச்சி விளையாட்டு சங்கம்

யாழ்ப்பாணம், மே 19

தாச்சி விளையாடிகள் ஈடுபடுவதற்குக்கான சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளது. இச்சங்கத்தின் ஆரம்ப கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு கோண்டாவில் அரசியல்துறை யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல தாச்சி விளையாடும் கழகங்களில் இருந்தும் ஒரு பிரதிநிதியை இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக் கொண்டுள்ளது. (த)

ஒய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், மே 19

ஒய்வூதியர்களின் மே மாத வவுச்சர்கள் இன்று தபாலகங்கள் ஊடாக விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபால் திபர் திரு. செ சோமஸ்வரன் தெரிவித்தார்

அமை சர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்துள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

கட்சியின் நலன்கருதி எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கும் தீர்மானம் ஒன்றை ஐ. தே. க. செயற்குழு அண்மையில் நிறைவேற்றியிருந்தது. அத்தீர்மானத்துக்கு எதிராக செயற்பட்டார்கள் என்ற காரணத்துக்காக இந்த நான்கு அமைச்சர்களையும் பதவி விலக்க ஜனாதிபதி விஜேதுங்கா எண்ணியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

புன்னாலைக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடக்க இன்று பிற்பகல் 3 மணிக்கு அவரின் உறவினர் வீட்டில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, தெருடாவில் கடற்றொழில் சங்கத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

பின்னர் இராணுவ அவிவகுப்பு மரியாதைகளுடன் புகழுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் புனித விதைகுழியில் விதைக்கப்படும். (உ-த-3)

மருந்துகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்தும் கழிக்கப்படாமல் — 50 விழுக்காடு வைத்து விற்பனை செய்தல்.

★ மருந்துப் பொருள்களை கொள்வனவு செய்யும் பிட்டையில் சங்கம் ஒப்பம் இட வேண்டும்.

★ மருந்து கொள்வனவு சிட்டைகள் [இன்வொயஸ்] பரிசீலனை செய்யப்படல் வேண்டும்.

★ சீரான மருந்து விநியோகத்தை மேற்கொள்ளல்.

★ வைத்தியர்களுக்கு முன்னுரிமை என்பது நீக்கப்பட்டுள்ளது.

★ சில்லறை வியாபாரத்திலும், மொத்த வியாபாரத்திலும் செயற்படும் மருந்தகங்கள் குறுப்பிட்ட விழுக்காட்டுக்கு மேல் தனது மருந்தகத்துக்கு மருந்துப் பொருள்களை ஒதுக்கி வைக்க முடியாது. (இது பதுக்கலை ஊக்குவிப்பதாக இருக்கும்)

★ தட்டுப்பாடான காலத்தில் ஆயுர்வேத வைத்தியர்களுக்கு மருந்துகள் கொடுப்பதை மொத்த வியாபாரிகள் நிறுத்துதல். (அ-5)

தளபாடங்கள்

தென்மராட்சி, மே 19

பச்சிலைப்பள்ளி பகுதியில் உள்ள வதிரேழு சனசமூக நிலையங்களுக்கும் ஐந்து பாலர் பாடசாலைகளுக்கும் மனை பிரதேச சபையினால் கடந்த 10 ஆம் திகதி தளபாடங்கள் வழங்கப்பட்டன.

சொத்தி உபாலி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தால் அவரைத் தண்டியுங்கள், ஆனால் உபாலி ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த வரவேர் என்று உதறிவிடாதீர்கள்"— என்று திரு கூரே கடந்த வாரம் இடம் பெற்ற அமைச்சர்கள் கூட்டத்தில் காரசாரமாக கூறினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

1988 ஜனாதிபதித் தேர்தலில் போது ஜே. வி. பியின் தீவிரவாதச் செயல்களுக்கு முகம் கொடுத்து பிரசாரத்தில் ஈடுபட்ட ஐக்கிய தேசியக் கட்சியினரில் சொத்தி உபாலியும் ஒருவர் என்றும் திரு கூரே கூறினார். (உ-எ)

கலைப்பீட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேறுகள் வெளியிடப்படாததை ஆட்சேபித்து—

கலைப்பீட 4 ஆம் ஆண்டு மாணவர்கள் நேற்று முன் தினம் முதல் தமது வகுப்புகளைப் பகிஷ்கரித்து மறியல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

மத்தியஸ்தம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியும் என்றும் அவர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

தென்னாசியப் பிராந்தியத்தில் பக்கம் சாராத நடுவு நிலைமை நாடாகக் கருதப்படும் பிரஸ்தாப நாடு இலங்கையுடனும், இந்தியாவுடனும் மிகவும் நெருங்கிய உறவுடையது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா தனது சொந்த நலனுக்காகவும், அரசியல் ஸ்திரத்தன்மைக்காகவும் இங்கைப் பிரச்சினையில் நாட்டம் கொண்டுள்ளதாகவும் —

ஆனால் தமது நாடு இலங்கையின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற நோக்கத்துக்காக மட்டும் இதில் நடுவராகப் பணியாற்ற விரும்புவதாகவும் —

சம்பந்தப்பட்ட தென்னாசிய நாட்டின் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளனவாம். (அ-உ-3)

கடற்கரையில் கிடந்த இளைஞனின் சடலம்

தென்மராட்சி, மே 19

கைதடி மேற்கு கல்லாவம் கடற்கரையில் 25 வயது மதிக்கத்தக்க இளந்தெரியாத இளைஞரின் சடலம் பொதுமக்களால் கண்டுபிடிக்கப்பட்டது. சடலத்திற்கு அருகில் புதிய லுமாலா வாக்கிள் ஒன்றும் காணப்பட்டது.

கறுப்பு நிற நீளக் காற்சட்டையும் மண் நிற மார்ட்டின் சேர்டும் அணிந்திருந்த இவ் இளைஞனின் சடலம் சாவகச்சேரி வாவத்துறையினரால் அடையாளம் காண்பதற்காக

தபால்களை இன்று சேர்க்க

யாழ்ப்பாணம்' மே 19

இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து மாலையில் மீண்டும் திருகோணமலைக்கு திரும்பிச் செல்லவிருக்கும் "பிளாம்பயன்" கப்பலில் தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்படவிருப்பதாகவும் —

அதனால் இன்று காலை 10 மணிக்கு முன்னர் வெளியூர்த் தபால்களை யாழ் பிரதம தபாலகத்தில் உள்ள பெட்டியில் சேர்க்குமாறும் —

யாழ் பிரதம தபாலதிபர் திரு. செ. சோமஸ்வரன் கேட்டுக்கொள்ளார். (உ-3)

விஸ்தரிப்பு

வடமராட்சி, மே 19

கரவெட்டி சோனப்பு நன்னீர்த் தேக்கம் விஸ்தரிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே புனரமைப்புச் செய்யப்பட்ட இந்நன்னீர்த் தேக்கத்தை விஸ்தரிக்குமாறு கரவெட்டி பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீநிவாஸன், யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரைக் கேட்டிருந்தார். (க-173)

கடற்கரையில் கிடந்த இளைஞனின் சடலம்

யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை 6. 00 மணிக்கு மீன் பிடிக்கச் சென்றோர் இச் சடலத்தை கண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இதே பகுதியில்— கோதீவுக் கடற்கரையில் — பக்கலைக்கழக மாணவி ஒருவரின் சடலம் கிடந்தது குறிப்பிடத்தக்கது. (உ-117)

குடியிருப்பு திறப்பு

தென்மராட்சி, மே 19

சாவகச்சேரி மட்டுவில் தெற்கு பொன்னம்மாள் குடியிருப்பில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் புதிதாக அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டம் கடந்த 7ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

இருபது வீடுகளைக் கொண்ட இக்குடியிருப்பில் திருமலை மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது (க-117-31)

மீன்பிடி வலைகள்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க உடுவில் பிரிவினர் இப் பகுதியில் உள்ள முப்பத்தைந்து மீனவக் குடும்பங்களுக்கு டிஸ்கோ மீன்பிடி வலைகளை வழங்கியுள்ளனர். (க-152)

நூல் கொள்வனவு

தென்மராட்சி, மே 19

சாவகச்சேரி பொது நூலகம் நிலையத்திற்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. (க-117)

உ

நாரந்தனை - சரவணை

கர்ணன் தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

நேற்படி ஆலயத்தின் நிலமை பற்றிய கலந்துரையாடல் 22-05-94 ஞாயிறு காலை 10 மணிக்கு அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கும் வேலணை மத்திய கல்லூரி யில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் மகாசபை உறுப்பினர்கள் யாவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

—ஆலய பரிபாலன சபையினர்.

(30949)

மங்களகரமான திறப்பு விழா

இன்று முதல் (19 - 05 - 1994) தனது சேவையினை ஆரம்பிக்கவுள்ளது.

"மாருதி" மரக்கறி உணவகம் (விஷ்ணுவிஹார்)

* சுத்தமான, சுவையான சைவ உணவுவகைகள்
* இனிப்புப் பண்டவகைகள், மற்றும்
* உங்கள் இல்லங்களில் நடைபெறும் வைபவங்களிற்குத் தேவையான சமான உணவு வகைகள் யாவற்றினையும் ஓட்டர் தந்து குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளலாம்.

மாருதி (விஷ்ணுவிஹார்)

163, மிசுசர நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

[7396]

தமிழீழ காவல்துறை

பதவி வெற்றிடங்கள்

உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

கல்வித் தகைமைகள்:- 8ஆம் வகுப்பு தொடக்கம் க. பொ. த. (உயர்தரம்) வரை

உயரம்:- 5' 6"

வயது:- 18 தொடக்கம் 30 வரை

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 25 - 05 - 94 ஆம் திகதி வரை பழைய பூங்காவிலுள்ள காவல் துறை அலுவலகத்திற்கு நேரடியாகச் சமுகம் தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஆண் / பெண் இரு பாலரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும், நேர்முகத் தேர்வின் இறுதித் தேர்விற்கு அழைக்கப்படாதவர்களும், உடனடியாகச் சமுகம் தரவும்.

பா. நடேசன்
பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை,
தமிழீழம்.

நடுவப் பணியகம்,
தமிழீழ காவல்துறை,
தமிழீழம்.
17 - 05 - 94

(B-8178)

மரண அறிவித்தல்கள்

நித்தியகல்யாணி இரவீந்திரன்

நித்தியகல்யாணி இரவீந்திரன் நேற்று (18-5-94) கொழும்பில் காலமானார்.

இவர் இரவீந்திரனின் அன்பு மனைவியும், ஆர்ஜினின் அன்புத்தாயாரும், கணேசன் (நாதஸ்வர வித்துவான், காரைநகர்) – யோகாம்பாளின் அன்பு மகளும், பத்நாதன் (நாதஸ்வர வித்துவான், அளவெட்டி) நாகேஸ்வரி தர்பதிகளின் அன்பு மருமகளும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
N.K பத்மநாதன்

கிளைர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம் (30963)

அந்தோனிப்பிள்ளை யோசேப்

கரம்பனைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை யோசேப் கொழும்பில் காலமானார்.

இவர் பொன்மணி (மெற்றில்டா) வின் அன்புக் கணவரும், றதி, சிறி (பிரான்ஸ்), ஸ்ரீபன் (கனடா) ஜெயந்தி, ஜெயசீலன், மஞ்சுளா ஆகியோரின் அன்புத் தகப்பனும், பவான் (தபாலகம், யாழ்ப்பாணம்) அவர்களின் மாமனாரும், அனற்றிருந்தாவின் பாசமிகு பாட்டனாரும், றொசம்மா, அல்போன்ஸ் ஆகியோரின் சகோதரருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
றதி பவான்
(மகன்)

28, 1 ஆம் ஒழுங்கை,
பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (30964)

தாமோதரம்பிள்ளை நல்லம்மா

சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி தாமோதரம்பிள்ளை நல்லம்மா நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், திருமதி கனகேஸ்வரி இராமலிங்கம் (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பாலசிங்கம் (கிளவமடு, படித்த வாலிபர் திட்டம்), கனகசிங்கம் (வடமேற்கிலை முகாமையாளர் சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்), ஆனந்தன் (கணக்குப் பதிவாளர், பிரதேச செயலகம், வட்டைவேலி), திருமதி பா. சகுந்தலாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று பிற்பகல் 4 மணிக்கு பூதவுடல் தண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
தா. கனகசிங்கம்
(மகன்)

கற்குழி வடக்கு,
சாவகச்சேரி. (30965)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org